# உதயன்

விலை ரூபா 6-00

சு.கூ.ர்:14வள்ளுவர் ஆண்டு2030கார்த்திகை9வியாழக்கிழமை (25-11-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:312


# தனித் தமிழீழத்துக்கு வாய்ப்பே இல்லை!

## வரதராஜப்பெருமாள் கூறுகின்றார்

''தனித் தமிழீழம் அமைவதற்கு வாய்ப்பே இல்லை. இனப்பிரச்சினைக்கு அது தீர்வாகவும் ஆக மாட்டாது'' — இப்படிக் கூறுகின்றார் வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாள்.

1990ஆம் ஆண்டு முற்பகுதியில் சுயாதீனமா — தன்பாட்டில் — 'தமிழீழப் பிரகடனம்' செய்து விட்டு இந்திய அமைதிப் படையுடன் நாட்டை விட்டு வெளியேறிய பின்னர், ஒன்பது மாதங்களுக்கு முன்பு நாடு திரும்பிய வரதராஜப்பெரு

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அரச செய்தி ஊடகங்களிடம் நஷ்டஈடு கோருகிறார் ரணில்!

## 50 கோடி ரூபா கேட்டு நோட்டீஸ்

கொழும்பு, நவ. 25

அரச செய்தி ஊடகங்களுக்கு எதிராக ஐம்பது கோடி ரூபா நஷ்டஈடு கோரி ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

தான் ஜனாதிபதியானால் வடக்கு — கிழக்கு மாகாண நிர்வாகத்தை இரண்டு வருடங்களுக்கு விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப் போவதாகத் தான் கூறியதாக அரச சார்பு வெகுஜனத் தொடர்புச் சாதனங்களில் வெளிவந்த செய்தி தொடர்பாகவே இந்த நோட்டீஸை ரணில் அனுப்பி வைத்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டி, தகவல் துறைப் பணிப்பாளர் ஆரியரூபசிங்க மற்றும் ஐ.ரீ.என்., ரூபவாஹினி ஆகியவற்றின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னியில் பின்னடைவு மட்டுமே; ராணுவத்தின் பலம் குன்றவில்லை!

## தளபதி ஜெனரல் டயஸ் கூறுகின்றார்

கொழும்பு, நவம்பர் 25

''இராணுவம் வன்னியில் சிறிது பின்னடைவைச் சந்தித்த போதிலும் அதனது பலம் குன்றவில்லை''

— இவ்வாறு வன்னி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் நீல் டயஸ் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள வன்னிப் படைகளின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வன்னிப் பகுதியில் தமது நிலைகளைப் பலப்படுத்தி வரும் இராணுவத்தினர் அங்கு மீண்டும் வழமை நிலையை உருவாக்குவதில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர் எனவும்—

இராணுவக் கட்டுப்பாட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மடு தாக்குதலுக்கு அரசே பொறுப்பு!

## ரணில் கூறுகின்றார்

கொழும்பு, நவ. 25

''மடுத் தேவாலயம் மீது இடம்பெற்ற தாக்குதலுக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்'' என்று ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

(10 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். நகரில் இளைஞர் மீது துப்பாக்கிச் சூடு

யாழ்ப்பாணம், நவ. 25

யாழ். ஆரியகுளம் சந்திக்கு அண்மையில் பருத்தித்துறை வீதியும் — பலாலி வீதியும் சந்திக்கும் இடத்தில் நேற்று மாலை இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தில், இளைஞர் ஒரு

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மல்லாவியிலும் நேற்றுப் பேரணி மடுத் தாக்குதலைக் கண்டித்து!

வவுனியா, நவ. 25

மடுத்தேவாலயப் பகுதி மீது கடந்த சனியன்று மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலைக் கண்டித்து மல்லாவியில் நேற்றைய தினம் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

மல்லாவி அனஞ்சயன்குளம் சந்தியில் இருந்து நேற்று முற்பகல் 11-30 மணிக்கு ஆரம்பமான மேற்படி பேரணி மல்லாவி பிரதான வீதியூடாகச் சென்று மல்லாவி நகரத்தில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அலுவலகம் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் அலுவலகம் ஆகியவற்றில் மகஜர்கள் கையளித்ததுடன் நிறைவுற்றது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மடுவில் காயமுற்றோருக்கு சிகிச்சை வவுனியாவில் அளிக்கமுடியாத நிலை

## கவலை தெரிவிக்கின்றார் ஆயர் ஜெபநேசன்

வவுனியா, நவ. 25

மடுத்தேவாலயத்தில் கடந்த சனி இரவு இடம்பெற்ற தாக்குதலில் காயம் அடைந்து வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள 54 பேருக்கும் சிகிச்சை அளிக்க முடியாத நிலையில் அந்த வைத்தியசாலை உள்ளது என்று தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆயர் வண. ஜெபநேசன் தெரிவித்தார்.

வவுனியா ஆஸ்பத்திரிக்கு நேற்று முன்தினம் சென்று நோயாளர்களைப் பார்வையிட்ட பின்னர் இத் தகவலை அவர் வெளியிட்டார்.

அங்குள்ள நோயாளர்கள் மனநிலை பாதிக்கப்பட்டு, விரக்தி நிலையில் உள்ளதாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னிப்புச்சபை கவலை மடுத் தாக்குதல் குறித்து

லண்டன், நவ 25

மடுத் தேவாலயப் பகுதி மீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் பொதுமக்கள் உயிரிழந்திருப்பது குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை ஆழ்ந்த அனுதாபமும் கண்டனமும் தெரிவித்துள்ளது.

யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் அரசாங்கமும்; விடுதலைப் புலிகளும் கடந்த சில மாதங்களாக பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தி கவலை தரும் போக்கைக் கடைப்பிடித்து வருகின்றன எனவும்—

அந்த வகையில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தஞ்சம் அடைந்திருந்த மடுத் தேவாலயம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் கண்டிக்கத் தக்கது எனவும்—

அந்த அமைப்பு மேலும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னார் தீவுக்குள்ளேயே 5,000 பேர் இடம்பெயர்வு

மன்னார், நவ 25

மன்னார் தீவில் தொடரும் பதற்றநிலை காரணமாக வங்காலை உட்பட 12 கிராமங்களைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரம் பேர் மன்னார் தீவுக்குள்ளேயே இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வங்காலையில் இருந்து இடம்பெயர்ந்துள்ள சுமார் 2 ஆயிரம் பேர் நகரப் பகுதியில் உள்ள சென் செபஸ்தியார் தேவாலயத்தில் தஞ்சம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# எழுச்சி நாள் ஆரம்பம்

தமிழீழ மாவீரர் எழுச்சி நாள் இன்று காலை 8மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

தமது பாசறைகள், பொது இடங்கள் ஆகியவற்றில் கொடியேற்றத்துடன் கொடியேற்றப் பாடலும் இடம்பெறும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இன்று முதல் மூன்று தினங்கள் அனுஷ்டிக்கப்படவிருக்கும் எழுச்சி நாள்களில் பொது இடங்களில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னியிலும் மட்டக்களப்பு மாவட்டத்திலும் விசேட நிகழ்வுகளுக்கு ஏற்பாடாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(உ-க-3-7)

# தமிழ்ப் பத்திரிகையாளர்கள் இருவரை சி.ஐ.டி. விசாரணை

## நாலாம் மாடியில் வைத்து!

கொழும்பு, நவ. 25

'தினக்குரல்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆ.சிவநேசச்செல்வனும் உதவி ஆசிரியர் எஸ். சிவகணேசனும் நேற்று இரகசியப் பொலீஸாரால் நாலாம் மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

போர் தொடர்பான சில செய்திகளைத் தணிக்கைக்கு உட்படுத்தாமல் பிரசுரித்தமை தொடர்பாகவே அவர்கள் விசாரிக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டதாகவும்—

நேற்றுப் பிற்பகலில் விசாரணைக்கு அழைக்கப்பட்ட அவர்கள் நேற்றிரவு 9.30 மணிக்கு விடுவிக்கப்பட்டதாகவும்—

தெரிவிக்கப்பட்டது.

(உ-3)


இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடமை உணர்வுடன் பணியாற்றி
# நீதித்துறைக்குப் பெருமை சேர்த்தவர்

## இரங்கற் கூட்டத்தில் யாழ். மேலதிக நீதிவான் உரை

யாழ்ப்பாணம், நவ. 25

''சென்ற இடமெல்லாம் கடமை உணர்வுடன் பணியாற்றி நீதித்துறைக்குப் பெருமை சேர்த்தவர் அண்மையில் அமரத்துவம் அடைந்த ஒய்வு பெற்ற நீதிபதி கனகசபை கதிரவேற்பிள்ளை'' யாழ். நீதிமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில் யாழ். மேலதிக நீதிவான் எஸ் ஏ.ஈ. ஏகநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தனது இரங்கல் உரையில் அவர் மேலும் கூறியதாவது:

நயினாதீவினைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒய்வு பெற்ற நீதிபதி கதிரவேற்பிள்ளை மூதூர், கிளிநொச்சி, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் நீதிபதியாகக் கடமையாற்றினார்.

1996 ஆம் ஆண்டு நீதித்துறையிலிருந்து ஒய்வு பெற்ற அமரர் கனடாவிலுள்ள தனது மனைவி, பிள்ளைகளிடம் சென்று சில மாதங்களிலே அங்கு அமரத்துவம் அடைந்தார்.

அவரின் ஆழ்ந்த சட்ட அறிவும், அனுபவமும் தான் சார்ந்த சமுதாயத்துக்கு ஓர் உதவியாக இருக்கும் என்று எதிர்பார்த்த வேளை ஏமாந்து விட்டோம்.

நயினாதீவு தேவஸ்தான அறங்காவலர் சபைத் தலைவராக இருந்த காலத்தில் அவர் ஆற்றிய பணிகளை எவரும் மறந்து விட முடியாது.

நீதித்துறையில் கடமையாற்றும் நாங்கள் அன்னாரை நன்றியுடன் நினைவு கூர்ந்து அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ். சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் செல்வி சாந்த அபிமன்னசிங்கமும் அஞ்சலியுரை நிகழ்த்தினார்.

## வீடியோ படக்காட்சி

யாழ்ப்பாணம், நவ. 25

திரைப் படமாக்கப்பட்ட இலக்கியப் படைப்புகள் வரிசையில் தி ஜானகி ராமனின் 'மோகமுள்' வீடியோ படக்காட்சி எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக புறநிலை படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தப் படக்காட்சியை ஆர்வலர்கள் எவரும் பார்வையிடலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

(உ-3-5-9)

## ஒளி விழாவும் ஆங்கில தின நிகழ்வும்

குருநகர், நவ. 25

யாழ். சென்றோக்ஸ் றோ. க வித்தியாலயத்தின் ஒளிவிழாவும் ஆங்கில தின நிகழ்வும் எதிர் வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் தி. சத்தியபாலன் தலைமையில் நடைபெறும்.

யாழ். மறைக்கல்வி நிலைய இயக்குநர் வண.பிதா ஆர்.சி. எச். நேசராஜா அடிகள பிரதம விருந்தினராகவும், யாழ். ஆங்கில மூலவள நிலைய இணைப்பாளர் க. அமலதாசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

(இ-51)

## மிதிவெடிகள் இன்னும் அகற்றப்படவில்லை

வலி.தென்மேற்கு, நவ. 25

யாழ். திறந்த பல்கலைக்கழக விரிவுரை மண்டபத்துக்கு அருகிலும் பின்புறத்திலும் உள்ள மிதிவெடிகள் அகற்றப்படவில்லை என பிராந்திய இயக்குநர் ச. ஆ ஞானேந்திரன் தெரிவித்தார்.

மிதிவெடிகள் இருப்பதற்கான அபாய பலகைகள் இடப்பட்டிருப்பதனால் மாணவர்கள் அப்பகுதிக்குச் செல்லாது தடைவிதிக்கப்பட்டிருப்பதாகவும் —

விரைவில் மேற்படி மிதிவெடிகளை அகற்றித் தருமாறு ஐ. நா. நிறுவனத்துக்கு தெரிவிக்கப்பட்டிருந்தும் மிதிவெடிகள் அகற்றப்படவில்லை என்றும் — அவர் கவலை தெரிவித்தார்.

இதேவேளை — கொக்குவில் தொழில்நுட்ப கல்லூரிக்கு அண்மையில் உள்ள மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

(இ-185)

## காங்கேசனில் 35 கைதிகள்

யாழ்ப்பாணம், நவ. 25

சாங்கேசன்துறை தடுப்பு முகாமில் தற்பொழுது ஏழு பெண்கள் உட்பட 35 பேர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்று நேற்று அங்கு சென்று கைதிகளைப் பார்வையிட்டுத் திரும்பிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ். ஸ்ரீதரன் தெரிவித்தார்.

கடந்த வாரம் அங்கு அனுப்பி வைக்கப்பட்ட மூவரின் விவரம் வருமாறு:-

★ மரியதாஸ் மேரிசர்மிலா (வயது 19) — அல்வாய் வடக்கு.

★ ஏரம்பமூர்த்தி பத்மினி (வயது 19) — நீர்வேலி மேற்கு.

★ சண்முகம் சர்மிலா (வயது 20) — மட்டுவில் தெற்கு.

(உ-10)

## திருத்தம்

24-11-99 உதயன் பத்திரிகை 2 ஆம் பக்கத்தில் வெளியான யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் விளம்பரத்தில் பிறின்சஸ் காஷ் கப்பலில் பொருள்களை ஏற்றி நஷ்டமடைந்தவர்கள்30-11-99 க்கு முன் வணிகர் கழகப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளவேண்டும் என்பதே சரியானது ஆகும். 30-11-99 என்பது தவறுதலாக 30-11-98 என்று பிரசுரமாகிவிட்டது. அதேபோன்று 14-8-98 இல் முல்லைத்தீவுக் கடலில் குண்டு வீசி அழிக்கப்பட்டபிறின்சஸ் காஷ் கப்பல் என்பதே சரியானது ஆகும். 14-8-98 என்பது தவறுதலாக 14-8-99 என்று பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)


### யாழ்ப்பாணத்திலிருந்து

யாழ்ப்பாண உற்பத்திப் பொருள்களையும்
ஏனைய பொருள்களையும்

### கொழும்புக்கு அனுப்புவோரது கவனத்துக்கு

எதிர்வரும் டிசம்பர் மாத முதற் கிழமை அளவில் யாழ்ப்பாணத்திலிருந்து 'குமண' கப்பல் கொழும்புக்குச் செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இக் கப்பலில் பொருள்களைக் கொண்டுசெல்ல விரும்புபவர்கள்,

1. இங்கிருந்து அனுப்பும் பொருள்களின் பெயர், அதன் அளவு போன்ற விவரங்களையும்
2. கொழும்பில் தங்களது பொருள்களைப் பொறுப்பேற்க அமர்த்தியுள்ள முகவரின் விவரங்களையும் அத்துடன் பொறுப்பேற்கும் முகவர் 1 MT இற்கு US $ 4 ஐ இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்திற்குக் கட்டுவதற்குச் சம்மதம் தெரிவிப்பதற்கான கடிதத்தினையும் பெற்று –உடனடியாக யாழ். செயலகப் புனர்வாழ்வுப் பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

– அரச அதிபர்

யாழ்ப்பாணம். (சி/9966)



நாகம்ஸ்
சுன்னாகம்
3 ஆவது வெற்றிவாரமாக
விஜய் – சாலினி
நடித்த
காதலுக்கு மரியாதை
காட்சிகள்:
11-00, 2-30.
(புதிய நேரம்)
(71220)

ராஜா
யாழ்ப்பாணம்
அர்ஜுன் – மீனா, ரம்பா
மற்றும் பலர் நடித்த
செங்கோட்டை
10-30, 2-30
(சி/9948)

றீகல்
வெண் திரை
(ஸ்ரான்லி றோட்)
றீகல் டாக்கீஸ்
(ஈச்சமோட்டை)
இன்று முதல்
முரளி = ரோஜா
ஊட்டி
10.30, 2. 30
(71249)

லிபேட்டி அச்சுவேலி.
அர்ஜுன்
நடித்த
முதல்வன்
காட்சிகள்: 10-30, 2-30
T.P.No.070-212223
070-212678
(71169)


## காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்கமும் உண்ணாவிரதத்தில்!

யாழ்ப்பாணம், நவ. 25

மடுத் தேவாலயத் தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ்.கத்தோலிக்க மறை வட்டத்தினர் ஏற்பாடுசெய்துள்ள உண்ணாவிரதத்தில் பங்குபற்றுவதென காணாமற் போனோரின் பாதுகாவலர் சங்கமும் முடிவுசெய்திருக்கின்றது.

இந்தப் போராட்டத்தில் காணாமற்போனோரின் பாதுகாவலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சங்கம் கேட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தில் கத்தோலிக்க அமைப்புக்கள் உட்பட ஏனையசமய அமைப்புக்களும் பொது அமைப்புக்களும் பங்குபற்றும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்காக அன்றையதினம் யாழ். மரியன்னை ஆலயத்தில் விசேட திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். (உ-3-8)

## சுருக்கெழுத்தாளர் நியமனம்

நெல்லியடி, நவ 25

பருத்தித்துறை மாவட்ட நீதிவான் நீதிமன்றத்திற்கு மேலும் இரு சுருக்கெழுத்தாளர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

செல்வி-தருமலிங்கம் யோகராணி, செல்வி-ஜெகநாதன் வாசுகி ஆகிய இருவருமே கடந்த 19 ஆம் திகதி முதல் நியமனம் பெற்றுள்ளனர்.

(க-109)

## விவரம் திரட்டல்

வலி.கிழக்கு, நவ. 25

வலிகாமம் கிழக்கு அச்சுவேலி புத்தூர் பிரதேச சபை உப அலுவலக எல்லைக்குள் பால் உற்பத்திக்காக மாடு வளர்ப்போரது விவரங்கள் பிரதேச சபையினால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இந்த பிரதேசசபைக்கு உட்பட்ட பால் மாடு வளர்ப்பாளர்களின் நன்மை கருதியே இந்த விவரங்கள் திரட்டப்படுகின்றன. சம்பந்தப்பட்டவர்கள் டிசெம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் அச்சுவேலி உப அலுவலகத்தில் விவரங்களைப் பதிவு செய்யுமாறு பிரதேச சபைத் தலைவர் கேட்டுள்ளார். (க-180)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிதம்பரநாதன் சாரதாதேவி

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிதம்பரநாதன் (கொத்தலாவலை) சாரதாதேவி 22—11—99 திங்கட்கிழமை கொழும்பு மஹரகமவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் பூரணலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற புத்திசிகாமணி மற்றும் இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் சிதம்பரநாதன் (கொத்தலாவலை) அவர்களின் அன்பு மனைவியும் தர்மராஜா, பத்மநாதன், கமலாதேவி, சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் குலராஜசேகரம், சரோஜினி, சம்பூர்ணம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23 11—99 செவ்வாய்க்கிழமை மாலை 6-00 மணியளவில் கனத்தை மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S.P. சிதம்பரநாதன் (கொத்தலாவலை)
(உரிமையாளர், கஜன் பேக்ஹவுஸ்)

ஏழாலை வடக்கு,
ஏழாலை. [சி/9969]

### திருமதி கந்தவனம் நல்லநாயகி

நெல்லியடி பிரபல வர்த்தகரான காலஞ்சென்ற குமாரசாமி கந்தவனம் அவர்களின் அன்பு மனைவி நல்லநாயகி 23-11-99 அன்று பூரணை திதியில் இறைபதம் எய்திவிட்டார்.

அன்னாரது இல்லமாகிய ''கந்தவன வாசா'' நெல்லியடியில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக வதிரி ஆலங்கட்டை மயானத்துக்கு இன்று (25-11-99) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ஸ்ரீரங்கநாதன்
(மகன்)

விண்மீன் அங்காடி,
நெல்லியடி, [சி/9971]

### கணபதி ஆறுமுகம்

நுணாவிலைப் பிறப்பிடமாகவும் கற்குழி முதலாம் ஒழுங்கை சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி ஆறுமுகம் அவர்கள் 24-11-99 புதன்கிழமை அதிகாலை காலமானார்.

இவர் தங்கநேசம் அவர்களின் அன்புக் கணவரும் தர்மபாலன் ( சாவகச்சேரி பனை தென்னை வ. அ. கூ. சங்க ஊழியர் ), செல்வி கலைவாணி ( ஆசிரியை, நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் ), செல்வி யோகராணி (கலைப்பட்டதாரி), செல்வி தயாழினி ( சமுர்த்தி பிரதேச செயலகம், சாவகச்சேரி ), தேவபாலன் (சாவகச்சேரி பனை தென்னை வ. அ. கூ. சங்க ஊழியர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (25-11-99) வியாழன் முற்பகல் 10-30 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
தர்மபாலன் ( ரவி )
( மகன் )

கற்குழி முதலாம் ஒழுங்கை,
சாவகச்சேரி. (சி/9967)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷெரீப்புக்கு எதிராகச் சாட்சி கூற

## தயார் என்கிறார் அவரது சகா

இஸ்லாமாபாத், நவ. 25 பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களில் இராணுவ ஆட்சியாளர்களுக்கு சார்பாக சாட்சியமளிக்க நவாஸ் ஷெரீப்புடன் கைது செய்யப் பட்ட அவரது சகாக்கள் நால்வரில் ஒருவர் முன்வந் துள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

பாகிஸ்தான் சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் முன்னாள் பணிப் பாளர் நாயகம் அமனுள்ளா சௌத்திரியே இவ்வாறு அரச தரப்பு சாட்சியாக மாறி உள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது

விமானக் கடத்தல், தேசத் துரோகம், கொலை முயற்சி ஆகிய குற்றச்சாட்டுக்களில் நவாஸ் ஷெரீப்புக்கு எதிராக சாட்சி அளிக்க சௌத்திரி முன்வந்துள்ளார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 12 ஆம் திகதி இராணுவத் தளபதி ஜெனரல் முஷாரப்பும் மேலும் 200 பயணிகளும் பயணம் செய்த விமானத்தை கராச்சி விமான நிலையத்தில் தரை இறங்க அனுமதிக்க வேண்டாம் என நவாஸ் ஷெரீப் தனக்கு உத்தரவிட்ட தாக அவர் தெரிவித்தார்.

நாளை வெள்ளிக்கிழமை காரச்சி பயங்கரவாத ஒழிப்பு நீதிமன்றில் நவாஸ் ஷெரீப் மீண்டும் ஆஜர் செய்யப்பட உள்ளார். அப்போது சௌத் திரி அவருக்கு எதிராக சாட்சி யமளிப்பார் என்று எதிர் பார்க்கப்படுகிறது. (இ-6-8)

# ஷெரீப்பின் குடும்பத்தவர் ஆட்சியாளர்களால் கைது

## இஸ்லாமாபாத்தில் திடீர் நடவடிக்கை

இஸ்லாமாபாத், ந . 25

பாகிஸ்தானில் பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் பிர தமர் நவாஸ் ஷெரீப்பின் குடும்ப உறுப்பினர்கள் சிலரும் உற வினர்கள் சிலரும் இராணுவ ஆட்சியாளர்களால் கைது செய் யப் பட்டுள்ளனர் என்று இஸ்லாமாபாத்தில் இருந்து கிடைக் கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நவாஸ் ஷெரீப்பின் தந்தை, அவரது மகன், சகோதரர் கள் ஆகியோர் கைது செய்யப்பட்டவர்களில் உள்ளடங்கி இருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இராணுவ ஆட்சியாளர்களால் புதிதாக கொண்டு வரப்பட்டுள்ள பொறுப்புக்களை சுமத்த வகை செய்யும் சட்டத்தின் கீழ் இவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட் டுள்ளதாகவும்—

அதன் பின்னரே இவர்கள் முறைப்படி கைது செய்யப் பட்டதாகவும் —

பொலீஸார் தெரிவித்தனர்.

எனினும் இவர்கள் எப்போது கைது செய்யப் பட்டனர் என்பது குறித்த தகவல்கள் வெளியிடப் படவில்லை.

நவாஸ் ஷெரீப்பின் அரசாங்கம் பதவி கவிழ்க்கப்பட்ட தன் பின்னர் அவரது குடும்பத்தினர் வீட்டுக் காவலில் வைக் கப் பட்டிருந்தனர். கடந்த வெள்ளியன்று ஷெரீப் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவரது குடும்பத் தினர் மீது இருந்து வந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு அவர் கள் வெளியில் நடமாடுவதற்கு அனுமதிக்கப்பட்டனர். தற் போது திடீரென அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் —

இராணுவ ஆட்சிக்கு அரசியல் அங்கீகாரம் அளிக்கும் வகையில் எதிர்வரும் ஜனவரி மாத பிற்பகுதியில் பொதுக் கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்த ஜெனரல் முஷாரப் திட்ட மிட்டு வருவதாக இஸ்லாமாபாத்தில் அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். [இ-6-8]

# 40 லட்சம் பேருக்கு எய்ட்ஸ்!

அடிஸ்அபாபா, நவ. 25 எதியோப்பியாவில் சுமார் 40 லட்சம் பேர் எய்ட்ஸ் நோய்க்கிருமியான எச். ஐ. வி யின் தாக்கத் துக்கு உள்ளாகி உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகி றது.

ஐ நா. சபையால் மேற் கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின்போது இந்தத் தக வல் வெளிவந்துள்ளது.

நாட்டில் உள்ள வயதா னவர்களில் 7 சதவீதமா னோர் இந்த நோயின் தாக்கத்துக்கு உள்ளாகி இருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. (இ-6-8)

# தனது நான்கு புதல்விகளைக் கொலை செய்த தகப்பன்!

## ஹைதராபாத்தில் கோரச் சம்பவம்

பொருளாதாரச் சுமை காரணமாக தந்தை ஒருவர் தனது நான்கு புதல்விகளைக் கொலை செய்த கோரச் சம்ப வம் ஒன்று இந்தியாவின் ஹைதராபாத் நகரில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரிவிக்கப்படுவதா வது —

ஏழைத் தொழிலாளியான ஏடையாவுக்கு (வயது 50) 5 பெண் குழந்தைகளும் இரு மகன்களும் உள்ளனர். பொரு ளாதார ரீதியில் மிகக் கஷ்டப்பட்ட நிலையில் உள்ள அவர் தனது பெண் குழந்தைகள் தனக்கு சுமையாக இருப்பதாக நினைத்தார். அதனால் தனது புதல்விகளை கொல்வதற்கு திட்டமிட்டார்.

ஒரு நாள் மாலை தனது 12, 10, 8, 4 வயதான புதல் விகள் நால்வரையும் பாழடைந்த மண்டம் ஒன்றுக்குள் அழைத்து சென்று கொலை செய்தார். என்று கூறப்பட் டது. ஏனைய ஒரு மகள் உறவினர் வீட்டுக்கு சென்றிருந்த தனால் உயிர் தப்பினார்.

கொலை செய்ததாக ஏடையாவும் கொலைகளுக்கு உதவியாக இருந்த அவரது புதல்வர்களும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பொருளாதார சுமை தாங்க முடியாமலேயே தனது புதல்விகளைக் கொலை செய்ததாக பொலீஸாரிடம் அவர் தெரிவித்துள்ளார். [6-8]

# இந்தோனேசிய ஜனாதிபதி அடுத்த மாதம் சீனா விஜயம்

ஜகார்த்தா, நவ. 25 இந்தோனேசியாவின் புதிய ஜனாதிபதி அப்துல் ரஹ்மான் வாஹிட் அடுத்த மாதம் ஆரம்பத்தில் சீனாவுக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ள உள்ளார்.

இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்தும், பொதுப்பிரச்சினைகள் குறித் தும் இந்த விஜயத்தின்போது இருநாட்டுத் தலைவர்களும் பேச்சு நடத்துவர் என அதி காரிகள் தெரிவித்தனர்.

சீனா உலகின் பெரிய நாடு களில் ஒன்று. அதிக மக்கள் தொகை கொண்ட நாடு. ராஜிய ரீதியாக இந்தோ னேசியாவுக்கு அளித்து வரும் ஆதரவை அது தொடர்ந்து வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி வாஹிட் தெரி வித்தார்.

இந்தோனேசியாவின் புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக் கப்பட்ட பின்னர் வாஹிட் மேற்கொள்ள உள்ள முதலா வது வெளிநாட்டுப் பயணம் இதுவாகும். (இ-6-9)

### செச்சினியாவில்

# மக்களை வெளியேறுமாறு ரஷ்யப்படை அறிவிப்பு

மொஸ்கோ, நவ. 25 செச்சினியாவில் கடந்த இரண்டு மாதங்களாக தாக்கு தல்களை நடத்தி வரும் ரஷ் யப் படையினர் செச்சினி யாவில் விமானத் தாக்குதல் களை தீவிரப்படுத்த உள்ள தால் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளை விட்டு பொதுமக்களை வெளியேறு மாறு கோரி உள்ளன.

தலைநகர் குறோஸ்னியை கைப்பற்றும் தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டிருப்ப தால பொதுமக்கள் விரை வில் வெளியேற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் ரஷ்யப்படைக ளின் தாக்குதல்களை எதிர்த்து தாக்குதல் நடத்து வதற்கு தயாராக உள்ளதாக செச்சினிய தீவிரவாதிகள் தெரிவித்துள்ளனர்.

அதேசமயம் —

அடுத்த ஆண்டு பெப்ர வரிக்குள் செச்சினியாவில் புதிய அரசு ஒன்றை அமைப் பதற்கான நடவடிக்கைகளை ரஷ்யாமேற்கொண்டு வருவ தாக தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்ய ஜனாதிபதித் தேர் தல்களுக்கு முன்னர் செச்சினி யாவை தனது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர ரஷ்யப் பிரதமர் தீவிரம் காட்டுவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். (இ-6-8)

# இந்திய-சீன எல்லை குறித்து பேச்சுக்கள்

புதுடில்லி, நவ. 25 இந்திய— சீன எல்லை குறித்து இரு நாட்டு அதிகாரி கள மட்டத்திலான 7 ஆவது சுற்று பேச்சுக்கள் நேற்று புது டில்லியில் நடைபெற்றன.

பிரச்சினைகளுக்குத் தீர்வு கான பரஸ்பரம் புரிந்து கொள்வதையும் நம்பிக்கை யையும் வளர்ப்பதே இந்தப் பேச்சுக்களின் முக்கிய நோக் கமாகும் எனத் தெரிவிக்கப் பட்டது. (இ-6)

# சீனாவின் பெரும் பகுதி மூடுபனியால் சூழப்பட்டது

பீஜிங், நவ. 25

சீனாவின் மூன்றிலொரு பங்கு பிரதேசம் மூடு பனியால் சூழப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் நாட் டின் நாளாந்த நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்படைந்துள் ளன.

பீஜிங் சர்வதேச விமான நிலையப் பகுதியும் மூடு பனியால் சூழப்பட்டுள்ளதனால் பெரும்பாலான விமானப் போக்குவரத்துகள் நிறுத்தப்பட்டுள்ளன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட உல்லாசப் பிரயாணிகள் சீனாவை விட்டு வெளி யேறுவதற்காக விமான சேவையை எதிர்பார்த்து பீஜிங் விமான நிலையத்தில் காத்திருக்கின்றனர்.

நாட்டின் பெரும் பகுதியை சூழ்ந்துள்ள இந்த மூடுபனி இன்று விலகி விடும் என்று எதிர்பார்ப்பதாக வானிலை அவ தானிப்பு நிலையம் அறிவித்துள்ளது தென்திசையில் இருந்து வீசும் காற்று மூடுபனிக் கூட்டத்தைக் கலைத்துவிடும் என்று அந்த நிலையம் தெரிவித்துள்ளது. (இ-6-8)

### அமெரிக்காவின்

# ஏவுகணை எதிர்ப்பு முறைத் திட்டம் ஆயுதப் போட்டியை உண்டாக்கும்

## சீன இராணுவ அதிகாரி தெரிவிப்பு

பீஜிங், நவ. 25 அமெரிக்கா உருவாக்கு வதற்குத் திட்டமிட்டுள்ள ஏவுகணை எதிர்ப்புப் பாது காப்பு நடவடிக்கை முறை உலகில் மீண்டும் ஆயுதப் போட்டியை ஏற்படுத்தும்.

சீனாவின் ஆயுதக் கட்டுப் பாடு மற்றும் படைக் குறைப் புக்கான பணிப்பாளர் ஷா ஹிக் ஹாங் இவ்வாறு தெரி வித்தார்.

ஏவுகணை எதிர்ப்புத் திட் டத்தை அமெரிக்கா செயற் படுத்தினால் அது பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தும். உலகில் தற்போது நிலவி வரும் நாடுகளுக்கிடையிலான சம பல நிலையை இந்த நட வடிக்கை குலைத்துவிடும். உலக மற்றும் பிராந்திய ஸ்திரத்தன்மைக்கும் இது அச் சுறுத்தலாக அமையும் என் றும் அவர் தெரிவித்தார்.

அதேசமயம்—

தாய்வானுக்கு 300 மைல் கள் தொலைவில் உள்ள ஓர் இடத்தில் சீனா ஏவுகணை நிலையம் ஒன்றை அமைத்து வருவதாக அமெரிக்கா வெளி யிட்ட அறிக்கை குறித்துக் கருத்துக் கூறுவதற்கு அவர் மறுத்துவிட்டார். [இ-6-9)

# மழையால் உயிரிழந்தோர் 11 ஆக அதிகரிப்பு

சென்னை, நவ 25 தமிழகத்தில் தொடர்ந்து பெய்துவரும் மழையினால் உயிரிழந்தவர்களின் எண் ணிக்கை 11 ஆக அதிகரித்துள் ளது.

கடும்மழையால் ஏற்பட் டுள்ள வெள்ளத்தால் 5 லட் சம் ஏக்கர் பயிர்கள் நீரில் மூழ்கி உள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது. (6-8)

உலக அரங்கில்

# ஜனாதிபதி கிளின்ரன் கொசோவோ விஜயம்

பெல்கிரேட், நவ. 25 கொசோவோவில் நேட்டோ துருப்பினருக்கும் சேர்பியப் படையினருக்கும் இடையி லான கடும் சண்டை நடை பெற்று முடிந்து அங்கு அமைதி திரும்பிய 5 மாத காலத்தின் பின்னர் அமெரிக்க ஜனாதி பதி பில்கிளிரன் கொசோவோ விற்கு விஜயம் செய்துள்ளார்.

மத்திய ஐரோப்பிய நாடு களுக்கான 10 நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள கிளின்ரன் அதன் ஒரு பகுதியாகவே கொசோவோவுக்கு விஜயம் செய்துள்ளார்.

கொசோவோவில் இடம் பெற்ற போரில் சேதமடைந்த பகுதிகளை மீளக்கட்டியெழுப் புவது குறித்தும்—

அமைதிப் படையினரின் பணி குறித்தும்—

கொசோவோவை அபி விருத்தி செய்வது தொடர் பாகவும் —

கிளின்ரன் கொசோவோ அரசியல் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்தினார்.

சேர்பியப் படையினர் கொசோவோவில் மேற் கொண்ட படுகொலைகளுக்கு பழிவாங்கும் வகையில் அங் குள்ள சேர்பிய இனத்தவர் கள் மீது நடத்தப்பட்ட கண் மூடித்தனமான தாக்குதல் கள் குறித்து கிளின்ரன் தனது கண்டனத்தை வெளியிடுவார் என எதிர்பார்க்கப்பட்டது. (இ-6-9)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சொந்தப் பாவனையில் உள்ள L M L. Vespa 115ஸ்ரீ தொடர் இலக்கம் புதுப்பிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு சந்திக்கலாம். முகவரி: 121, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்..
(71135)

New Computer Stabiguard (C S Series) Video bulb (Osram Germany (1000W) Sony P6 120 MP3 (8MP) Cassette விற்பனைக்குண்டு. 154, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
(71229)

### வீடு விற்பனைக்கு

இல 196, கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள வீடும் 5 பரப்புக்காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அருட்திரு ஜெ. ஜெபமோகன் பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர் நிலையம், வளாக ஒழுங்கை, திருநெல்வேலி.
(71198)

### இறைச்சிக் கோழிகள் தேவை

Broiler இறைச்சிக் கோழிகள் தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். தனபாலசிங்கம் 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர்.
(71182)

### வாங்கப்படும்

பாவித்த பழைய வீட்டுப் பனைமரங்கள் வாங்கப்படும், (கைமரம், வளை), உடன் தொடர்பு கொள்ளவும். இயக்குநர், இல. 6, கனகரட்ணம் சந்தி, அரியாலை.
(71233)

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ். மாநகர எல்லைக்குள் தனிவீடு அல்லது அனெக்ஸ் [Annex] வாடகைக்குத் தேவை [3 பேர் அடங்கிய சிறிய குடும்பத்திற்கு] தொடர்பு: விளம்பர இல. 973, மே/பா உதயன் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(71175)

## முதுதத்துவமாணிப் பட்டம் பெற்றார்

யாழ்ப்பாணம், நவ. 25

பலாலி ஆசிரியர் கலாசாலையின் கணித விரிவுரையாளரும் கணித நெறித் தலைவருமான த காங்கேசம்பிள்ளை யாழ். பல்கலைக்கழகத்தின் கல்வியியல்துறையில் முதுதத்துவமாணிப் பட்டம் பெற்றுள்ளார்.

பேராசிரியர் க. சின்னத்தம்பியின் மேற்பார்வையின் கீழ் ''யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆண்டு 6 இல் இருந்து ஆண்டு 11 வகுப்புக்கள் வரை கணிதத்தில் மெல்லக் கற்போர்'' என்னும் விடயம் பற்றிய ஆய்வை மேற் கொண்டு இந்தப் பட்டத்தை அவர் பெற்றுள்ளார்.

யாழ் இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் கணிதப்பட்டதாரியுமான காங்கேசம்பிள்ளை மண்டைதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவராவார்.

(அ-க)

## விற்பனைக்கு

எமது சங்கத்தில் பின்வரும் விவரப்படி இரு நல்லின மாடுகள் விற்பனைக்கு உண்டு.

இல. 47 சகிவால் கலப்புக் காளை வயது 13 மாதம்

இல. 48 ஜேர்சி கலப்புக் காளை வயது 13 மாதம்

தேவையானவர்கள் மாடுகளைப் பார்வையிட்டு தமது கூறுவிலைகளை 30—11—99 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

பொது முகாமையாளர்.
யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.
கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய். [சி/9958]

## தொழில் நுட்பக் கல்லூரியின் இறுதிப் பரீட்சை- 99

ஆங்கில, தமிழ் சுருக்கெழுத்து தட்டெழுத்துப் பரீட்சை வருகிற சனிக்கிழமை 27 - 11 - 99 அன்று காலை 8 30 மணிக்கு ஆரம்பமாகிறது. ஆகவே இறுதிப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அதற்குமுன் பகுதித் தலைவரை வந்து சந்திக்குமாறு கேட்கப்படுகிறார்கள்.

அதிபர்

தொழில் நுட்பக் கல்லூரி
யாழ்ப்பாணம்.
[சி/ 9959]

## பாராட்டுகின்றோம்

### திரு. சிவக்கொழுந்து பரமானந்தம் சுவாமி (J.P.)

பாண்டியந்தாழ்வைச் சேர்ந்த சிவக்கொழுந்து பரமானந்தம் சுவாமி அவர்கள் 9-11-99இல் யாழ்ப்பாண நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திரு எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவரை நாங்கள் வாழ்த்துகின்றோம்.

கா. திருநீலகண்டன்,
(உதயன் விற்பனையாளர்).

பாண்டியந்தாழ்வு,
கொழும்புத்துறை.
(71235)

## சாவகச்சேரி நகர சபை

# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் 09—12—99 ஆம் திகதி முற்பகல் 10-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதே தினம் 10-30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) 'தரம் எம் 9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திலும் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர் மாத்திரமே கேள்விப்பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையவராவார்.

ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப்பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | கேள்விப்பத்திரக் கட்டணம் |
|---|---|---|
| 1. சாவகச்சேரி பொதுச் சந்தையில் நீர்த்தாங்கி அமைத்தல் | 4,000/- | 500/- |
| 2. நூல்நிலையத் தளபாடங்கள் செய்துவழங்கல் | 1,000/- | 250/- |


கேள்விப் பத்திரங்களைச் சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 06—12—99 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை மேற்குறித்த கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மு. செ. சரவணபவ,
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
(சி/9954)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 07 — 01 — 1932

உதிர்வு 26 — 10 — 1999

### அமரர் சுவாமிநாதன் ஸ்ரீபாஸ்கரன்

ஜே பி. யு. எம்.
(தலைவர், வலி. வடக்கு பிரதேச சபை, மல்லாகம்.)

ஊருலகில் பேர் விளங்கும்
உத்தம சீலரே – பாஸ்கரன் ஐயாவே
உமையிழந்த சோகமின்னும்
சொட்டும் குறையவில்லை - நெஞ்சைவிட்டு
நின் நினைவு மட்டும் மறையவில்லை ஐயா.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உபதலைவர், உறுப்பினர்கள். செயலாளர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

வலி. வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை,
மல்லாகம்.
(சி/9963)

# மரண அறிவித்தல்கள்

## அப்புத்துரை சொலமன் பாலச்சந்திரன்

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை சொலமன் பாலச்சந்திரன் 21-11-99 அன்று ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் அளவெட்டி தெற்கு திரு. திருமதி அப்புத்துரை [மாஸ்ரர்] தம்பதிகளின் அன்புப் புதல்வனும், அளவெட்டி வடக்கு காலஞ்சென்ற செல்லத்துரை தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பாலயோகினியின் அன்புக் கணவரும், மினா, அனோ, அனிற், பிரஜீவ் ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தா, பத்மா, ஐவர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஞானேஸ்வரி, அருந்தவநாதன் [அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கம்], பாலகௌரி [ஜேர்மனி], பாலவிஜிதா [சுவிஸ்] ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (25-11-99) வியாழக்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்
செல்லத்துரை அருந்தவநாதன்
[மைத்துனன்]

செட்டி வளவு,
அளவெட்டி கிழக்கு,
அளவெட்டி.
[71234]

## திருமதி நாகலிங்கம் சொர்ணம்மா

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 8 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சொர்ணம்மா அவர்கள் 23-11-1999இல் புதுக்குடியிருப்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் (வர்த்தகர் மடத்துவெளி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-தில்லைவனம் ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பெரியதம்பி-சிதம்பரம் ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தி (விவசாய போதனாசிரியர்), லோகேஸ்வரி, லோகேஸ்வரன் (மன்னார்), குணபாலசுந்தரி, காலஞ்சென்ற கோபாலசுந்தரம், திருமகள், புஷ்பராணி (வவுனியா), பரமேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், தனபாலன் (புதுக்குடியிருப்பு), மங்கையர்க்கரசி, (கனடா), செல்வமலர், காலஞ்சென்ற செல்வராசா, பஞ்சரெட்ணம், அன்னலிங்கம், கருணாகரன் (வவுனியா), சந்திரவதனி (கனடா) ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை, நடராசா, இளையதம்பி, மீனாட்சி மற்றும் சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற உப தபாலதிபர்), திருநாவுக்கரசு (கனடா) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளை, தெய்வேந்திரம் (கொழும்பு), அருமைநாயகம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு 24-11-1999 அன்று புதுக்குடியிருப்பில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்றோம்.

தகவல்:
குணபாலசுந்தரி
(மகள்)

இல. 1029/39, கே. கே. எஸ். வீதி,
மதவடி லேன், யாழ்ப்பாணம். (71231)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மையினர் தமதுபகுதிகளை தாமே நிர்வகிக்கும் தீர்வே அவசியம்

## வாசுதேவ கூறுகிறார்

கொழும்பு, நவ. 25

'சிறுபான்மை மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் பிரதேச சுயாதிபத்தியத்தின் அடிப்படையில் அவர்கள் தமது கருமங்களைத் தாமே நிர்வகிக்கக் கூடிய தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சண்டியில்நடந்த முன்னணி பேராளர் மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அங்கு அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களாக வாழும், கிராமப்புற சாமான்யர்களின் எதிர்கால சுபீட்சத்திற்கும் சாதி, மத, இன பேதமற்றரீதியில் தேசத்தின் அனைத்து மக்களும் வாழும் பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்யவும் —

தேசிய இனப்பிரச்சினைக்கு — முக்கியமாக சிறுபான்மை மக்கள் கௌரவத்துடனும் நம்பிக்கையுடனும் வாழ்வதற்கும் — அவர்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் பிரதேச சுயாதிபத்தியத்தின் அடிப்படையில் அவர்களின் தேவைகளை அவர்களே நிர்வகிக்கக்கூடிய நியாயமான தீர்வொன்றைக் காணவும் — சமூகத்தின் அடிமட்டத்தில் வாழும் ஏழை உழைக்கும் மக்கள் அனைவரும் பாதிப்புக்களுக்கு உள்ளாக நேரிடும் போது அரசு மாகாண, பிரதேச, பிராந்திய நிர்வாகங்களில் தலையிட்டு சீரழிந்தவற்றை சீராக்கவும் —

இன்றைய காலகட்டத்தில் முன்னெப்போதும் இல்லாதவாறு ஜனநாயகத்தின்தேவை மிக மிக அவசியமாக இருக்கின்றது.

மக்கள் பிரதிநிதிகள் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதுடன் அந்த அந்த மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் தமது பதவிக்காலங்களின் நலன்களுக்கு எதிராக செயற்படுவார்களேயானால் அவர்களது பதவிக் காலத்தின் முன்பாக அவர்களைத் தெரிவுசெய்த மக்களாலேயே பதவியிலும், பிரதிநிதித்துவத்திலும் இருந்து பதவி நீக்கம் செய்யும் உரிமைகள், புதிய ஜனநாயகத்தின் காரணியாகவும் எமது பொது வாழ்வினதும் அரசியல் சாசனத்தினதும் அம்சமாகவும் இருக்க வேண்டும்.

சந்திரிகாவோ ரணில் விக்கிரமசிங்காவோ இனப்பிரச்சினையை தமிழ் பேசும் மக்கள் கௌரவமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வொன்றை நடைமுறைப் படுத்துவார்கள் என்ற நம்பிக்கை தமிழ் பேசும் மக்களுக்கு இல்லை.

இப்படி அவர் கூறினார்.

(இ-க-3-6)

## பரீட்சைகள்

அரசாங்க, மாகாண அரசாங்க மற்றும் சிறைச்சாலைத் திணைக்கள ஊழியர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 27 ஆம், 28 ஆம்திகதிகளில் நடைபெறவுள்ளன.

சிறைச்சாலைத் திணைக்களத்தில் ஜெயிலர் பதவியில் வகுப்பு இரண்டுக்கு பதவி உயர்வுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 27 ஆம் திகதியும்—

அரசாங்க, மாகாண அரசாங்க சேவைகளில் கணக்குப் பதியுநர் சேவையில் அதிசிறப்புத் தரத்துக்கு நியமனம் மற்றும் சிறாப்பர் சேவையில் அதிசிறப்புத் தரத்துக்கு நியமனம் செய்யப்படுபவர்களுக்காக நடத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகள் எதிர்வரும் 27 ஆம், 28 ஆம் திகதிகளிலும்— நடைபெறவுள்ளன.

இந்தப் பரீட்சைகளில் தோற்றுவோருக்கான அனுமதி அட்டைகள் யாழ் கல்வித் திணைக்களத்தினால் நேற்று முன்தினம் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(இ-3-9-10)

# ஹொங்கொங் இசைவிழாவில் யாழ். கலைஞர் பங்குபற்றினர்

யாழ்ப்பாணம், நவ. 25

ஹொங்கொங்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இசை விழாவில் யாழ்ப்பாணக் கலைஞர்கள் பங்குபற்றினர்.

நாகசுரகான கலாநிதி என். கே. பத்மநாதன், எம். பி. நாகேந்திரம் ஆகியோர் நாகசுரமும், என். ஆர். எஸ் ரவி என் ஆர். எஸ் சுதா ஆகியோர் தவிலும் வாசித்து சகலரின் பாராட்டுக்களையும் பெற்றனர்.

ஏராளமானவர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் பங்கு பற்றிய பின்னர் என். கே. பத்மநாதன் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளார். (இ-3)

# சங்கம் அமைக்க முயற்சி

வலி. தென்மேற்கு, நவ. 25

யாழ்.மாவட்டத்தில் 8 ஆயிரம் பட்டதாரிகள் நியமனத் திட்டத்தின் கீழ் நியமனம் பெற்றவர்கள் சங்கம் ஒன்றினை அமைக்கத் திட்டமிட்டுள்ளனர்.

தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகத்தின் கீழ் நியமனம் பெற்ற 285 பட்டதாரிகளும் இதில் இணைய உள்ளனர்.

நியமனம் பெற்ற பட்டதாரிகள் பலருக்கு நியமனம் தொடர்பான பதவிகள் வழங்கப்படவில்லை, உரிய காலத்தில் வேதனம் அனுப்பப்படுவது இல்லை, நிரந்தர நியமனம் மற்றும் சம்பளத் திட்டங்கள் போன்றவை வழங்கப்படவில்லை.

இந்தக் கோரிக்கைகளை முன்னெடுத்துச் செல்லவே மேற்படி சங்கம் அமைக்கப் படவுள்ளதாகத் தெரிய வருகிறது. (இ-185)




(சி/9*13)



## லைடனின் மலிவு விற்பனை

லைடன் வாடிக்கையாளர் நன்மை கருதி
இன்று (25-11-99) முதல்
நத்தார் - புதுவருட
மலிவு விற்பனையை ஆரம்பித்துள்ளோம் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

''எமது புடைவை நிலையத்தில் வாங்கும் ஒவ்வொரு புடைவைத் துணிகளுக்கும் விசேட கழிவு வழங்கப்படும்''.

**லைடன் புடைவை நிலையம்**
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T. P 2381
(சி/9805)


# வைபவங்களுக்கு பொதுமக்களே அழைப்பு அனுப்புவது வழக்கம்

## பிரதேச சபைத் தலைவர் விளக்கம்

யாழ்ப்பாணம், நவ. 25

பிரதேச சபையின் நிதி உதவியுடன் சனசமூக நிலையங்கள் மற்றும் கட்டடங்கள் கட்டப்பட்டாலும் அது தொடர்பான ஆரம்ப வைபவங்களுக்கு அழைப்பு அனுப்புவது பொதுமக்கள் தான். அழைப்பு வரும் பட்சத்தில் பிரதேச சபை உறுப்பினர் எவரும் அதில் தாராளமாகக் கலந்து கொள்ளலாம்.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வலி மேற்குப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் இடம்பெறும் நிகழ்ச்சிகளுக்கு தமக்கு அழைப்பு அனுப்பப் படுவதில்லை என்று அந்தப் பிரதேச சபையின் உறுப்பினரான செ. பத்மநாதன் வடக்கு — கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு முறைப்பாடு செய்திருந்தார்.

இதற்குப் பதில் அளிக்கும் விதத்திலேயே பிரதேசசபைத் தலைவர் மேற்கண்ட அறிக்கையை விடுத்துள்ளார்.

அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

பிரதேச சபை நிகழ்ச்சிகளுக்கு உறுப்பினர்களை அழைக்கவேண்டும். அப்படி அழைக்காது விடும்பட்சத்தில் அது தவறானது ஆகும். ஆனால் பிரதேச சபையின் நிதி மூலம் மேற்கொள்ளப் படும் சனசமூக நிலையங்கள், கட்டடங்கள் போன்றவற்றின் வேலைத்திட்டங்கள் முடிவுற்றதும் ஆரம்பநிகழ்வுக்காக அப்பகுதி மக்களாலேயே அழைப்பு விடுக்கப் படுகிறது இது மக்களின் ஜனநாயக உரிமை. இப்படியான நிகழ்ச்சிகளில் பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் அழைப்புக் கிடைக்கும பட்சத்தில் அவர்கள் தாராளமாகக் கலந்து கொள்ளலாம்.

கடந்த மாகாண சபைத் தேர்தலில் மேல் மாகாண சபையின் கூபேர்சை உறுப்பினராக செ. பத்மநாதன் போட்டியிட்டுள்ளார். வலி மேற்கு பிரதேச சபையின் இந்த உறுப்பினர் கொழும்பு சென்று தேர்தலில் போட்டியிட்டுள்ளார். தனது பிரதேச சபை உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்த பின்னரே அவர் போட்டியிட்டிருக்க வேண்டும் இது ஒரு மோசடி ஆகும்.

தமது கட்சியை மதித்தும் சபை சார்ந்த நலனிலும் கூடிய கவனத்தை தலைவர் செலுத்தியிருக்கின்றார் என்று செ. பத்மநாதன் பலதடவைகள் கூறியிருக்கின்றார். மக்களின் அங்கீகாரம் பெற்ற — மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட— கட்சி மக்களின் கோரிக்கையை ஏற்று நடப்பது தவறா?

சபையின் மாதாந்த கூட்டங்களுக்கு ஒழுங்காக சமுகமளிக்காது கடிதமூலம் கொழும்பில் நின்று கொண்டு அறிக்கை விடுவது மூலம் எமது மக்களின் சேவையை சீர்குலைப்பது இவரின் நோக்கம் தான வேலை ஆகும். இது கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கொண்டு கல் எறிவதைப்போன்று அமைந்துள்ளது. இது விடயமாக மேற்குறித்த உறுப்பினரின் நடவடிக்கையை எமது சபை உறுப்பினர்கள்பலதடவைகள் ஆட்சேபித்துள்ளனர் என்பதை எடுத்துக்காட்டுகிறேன்.

கொழும்பில் நின்று கொண்டு பிரதேசசபை அடையாள அட்டை வழங்கவில்லை என்று பொறுப்பு வாய்ந்த பிரதேச சபை உறுப்பினர் பலதடவை தொலைபேசி மூலமும் கடிதமூலமும் எமக்கும் உள்ளூராட்சி ஆணையாளருக்கும் அறிவித்திருந்தார். பிரதேசசபை அடையாள அட்டை எடுக்கும்போது மேற்குறித்த உறுப்பினர் எனது முன்னிலையிலேயே கையொப்பமிட்டு அடையாள அட்டை எடுக்க வேண்டும். நேரடியாக அனுப்புவது சபை ஒழுங்கு விதிகளை மீறும் விடயமாகும்.

1998 மாகாணசபைத் தேர்தலில் அவர் போட்டியிட்டது சம்பந்தமாக சபை எடுத்த நடவடிக்கை என்ன என்று ஒக்ரோபர் 27 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். அவர் மேல் மாகாண சபைக்குப் போட்டியிட்டது சம்பந்தமாக தெரிவத்தாட்சி அலுவலருக்கு கடிதமூலமும் தொலைநகல் மூலமும் நாம் அறிவித்திருந்தும் இதுவரை எந்த விதநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன் — என்றுள்ளது. (இ)

# 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 15 | | 26 |
| — | | — |
| 10 |  | 08 |
| — | | — |
| 1953 | | 1999 |

## அமரர் நடராஜா திசைவீரசிங்கம்

பாசத்தின் உறைவிடமாய் இருந்து எங்களை எல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி எய்திய அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இன்று [25-11-1999] வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்

மனைவி - சத்தியபாமா
மகள் - றஜீனா

இராஜ வீதி.
சிறுப்பிட்டி மேற்கு.
நீர்வேலி.

[71138]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை

எமது ஆலயத்துக்கு நல்ல ஒழுக்கமும், நல்ல குணமும் உடைய ஒரு பூசகர் தேவை. கோயிலுக்குரிய வசதியான வீட்டில் குடியிருந்து பூசைகளை செய்தல் வேண்டும். சம்பளம் மற்றும் வடயங்களை நேரில் பேசிக்கொள்ளலாம். 15—12—1999 ஆம் திகதிக்குமுன்னர் விண்ணப்பித்தல் வேண்டும்.

செ. அன்னராசா
காரியதரிசி

சிவபூதராயர் கோவில்,
சுன்னாகம் தெற்கு.
(71227)

# தொழில்நுட்ப செய்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 25

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் ஆங்கிலம் மற்றும் தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆகியவற்றுக்கான பயிற்சிநெறியின் செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 27 ஆம் திகதிநடைபெறவுள்ளன.

அதற்றிக்குரிய அனுமதி அட்டைகளை அலுவலகத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு அதிபர் பொ. செந்தில்நாதன் தெரிவித்துள்ளார்.

(ஐ- 3-10)

# சிறைச்சாலை புனரமைப்பு

யாழ்ப்பாணம், நவ. 25

யாழ். பிரதான வீதியில் அமைந்திருக்கும் மத்திய சிறைச்சாலையின் புனரமைப்பு வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

சிறைச்சாலையின் கூரை மற்றும் சிறைச்சுவர்கள் என்பன 6 லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுவருவதாகசிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ - 9)

# விசேட பயிற்சி வகுப்பு

டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் நலன் கருதி சுன்னாகம் றோட்டரக்ட் கழகத்தினர் விசேட பயிற்சி வகுப்புக்களை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றனர்.

எதிர்வரும் 27,28ஆம் திகதிகளில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான விசேட பயிற்சி வகுப்புக்கள் மருதனார் மடத்தில் இயங்கி வரும் யூனியன்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

(க-152)

# அறிவித்தல்

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் சகல அங்கத்தவர்களையும் 28—11—99 ஞாயிற்றுக்கிழமை காலை 8 00 மணிக்கு எமது சங்க போஷகரும் ஆலய நிர்வாகசபைத் தலைவருமாகிய கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பவளவிழா சம்பந்தமாக முக்கிய விடயம் ஆராயப்படவுள்ளதால் கட்டாயமாக ஒன்றுகூடுமாறு வேண்டுகின்றோம்.

நிர்வாகம்
தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்.

(12271)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 06 — 03 — 1929 | 05 — 12 — 1998 |

## அமரர் முத்தார் சின்னத்துரை

(செல்லமணி)

(ஓய்வுபெற்ற சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்)

ஆண்டு ஒன்று சென்றதப்பா
உங்கள் அன்பு முகம் கண்டு ஆண்டாயிரம்
ஆனாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சைவிட்டகலாது

என்றென்றும் உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி. பிள்ளைகள் மருமகன்.

காலையடி தெற்கு,
பண்டத்தரிப்பு
(71145)

# முகவரி மாற்றம்

291, ஸ்ரான்லி வீதியில
இயங்கி வந்த
யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பணிமனை
இல. 637, கே. கே. எஸ். வீதியிலுள்ள
புதிய கட்டடத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளது.

பதில் மாவட்டச் செயலாளர்.

யா.மா. சி. க வ. கூ. ச. சமாசம்.
திகதி:- 24—11—99
(சி/9957)

# ஓர் ஆண்டு கண்ணீர் நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 — 06 — 1956 | 06 — 12 — 1998 |

## அமரர் தர்மலிங்கம் உருத்திரலிங்கம்

திதி: 25--11--1999

குடும்பத்தின் குலவிளக்காய்த் திகழ்ந்து மறைந்த எங்கள் அன்புத்தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்.

7 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
(71230)

# வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.

## கருவாட்டுக் கடை, இறைச்சிக் கடைகளுக்கான

# மீள் கேள்வி அறிவித்தல் - 2000

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட கருவாட்டுக் கடை, இறைச்சிக் கடைகள் 01-01-2000 முதல் 31-12-2000 வரையான காலப் பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் 30-11-99 ஆம் திகதி பி. ப. 2 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே பி. ப. 2-30 மணிக்கு கேள்விச் சபையால் திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் 30-11-99 ஆம் திகதி மு. ப 10-30 மணி வரை மல்லாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கீழ்க் குறிப்பிட்ட கேள்வி வைப்புப் பணம், கேள்விப் படிவக் கட்டணம் ஆகியவற்றை பணமாகச் செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| குத்தகை விவரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|
| **மல்லாகம் உப அலுவலகம்** | | | |
| 1. மல்லாகம் சந்தை மாட்டிறைச்சிக்கடை (மாத வாடகை 300/-) | 48,000.00 | 1000 00 | 100.00 |
| 2. மல்லாகம் சந்தை ஆட்டிறைச்சிக் கடை (மாத வாடகை 300/-) | 10,000 00 | 1000.00 | 100.00 |
| 3. மல்லாகம் சந்தை கருவாட்டுக் கடை (மாத வாடகை 300/-) | — | 500 00 | 100 00 |

வி. சண்முகநாதன், ஜே பி.
உப தலைவர்,
வலி.- வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை, மல்லாகம்.
23 - 11 - 1999
(சி/9953)

# 31ஆம் நாள் நீங்கா நினைவலைகள்



| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 07 - 01 - 1932 | 26 - 10 - 1999 |

அமரர்

## சுவாமிநாதன் ஸ்ரீ பாஸ்கரன் B.A.,J.P.U.M.

(வலி வடக்கு பிரதேச சபைத் தலைவர், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்)

(04 - 12 - 99) சனிக்கிழமை அன்று தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தானத்தில் நடைபெறவிருக்கும் மோட்ச அர்ச்சனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி பா. ஸ்ரீ பாஸ்கரன்

7 ஆம் கட்டை ஒழுங்கை,
மல்லாகம்.
(71190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தமிழருக்கு உணவு

வன்னிப் பிரதேசத்தில் பெரும் போர் நடைபெற்று வருகிறது. போர் சம்பந்தமான சரியான, விரிவான செய்திகளை மக்களுக்கு வழங்கும் சுதந்திரம் பத்திரிகைகளிடம் இருந்து பறிக்கப்பட்டுள்ளது. போர்ச் செய்திகளுக்குத் தணிக்கை விதிக்கப்பட்டுள்ளதால் அரசாங்கம் சொல்ல விரும்பியதை மட்டுமே மக்கள் வாசிக்கவும், கேட்கவும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். அதனால் போர் தொடர்பான செய்திகளை அறியும் மக்களின் அடிப்படை உரிமையும் பறிக்கப்பட்டுள்ளது.

முன்னர் நடைபெற்ற சிறிய அளவிலான இராணுவ நடவடிக்கைகளின் போதே போர்ப் பிரதேசமான வன்னிப் பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்கள், மருத்துவ வசதிகள் அரசினால் வழங்கப்படுவதில்லை.

இது விடயத்தில் கொழும்பில் உள்ள அரசாங்க அதிகாரிகளும் அரச தலைவர்களும் போதிய, உண்மையான கவனம் எடுப்பதில்லை. ஆனால் தங்கள் தரப்பை நியாயப்படுத்துவதற்குப் பல காரணங்களை அவ்வப்போது கூறிச் சமாளித்து விடுவது நடைமுறையாகி உள்ளது.

அதனால் வன்னிவாழ் மக்களுக்கான உணவு விநியோகம் பல நாள்களுக்குத் தடைப்படுவதும் பலரின் கண்டனங்கள், அழுத்தங்களின் பின்னர் நடைபெறுவதும் இப்போது சர்வ சாதாரணமாகிவிட்டன. ''ரண கோஷ'' இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து பாதை எதுவும் இல்லாத நிலையில், 40 நாள்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் வன்னிக்கு எடுத்துச் செல்லப்படவில்லை.

விடுதலைப் புலிகளின் 'ஓயாத அலைகள் – 3'' தாக்குதல்கள் ஆரம்பமடைந்த இம் மாதம் இரண்டாம் திகதிக்கு முந்திய நாளான முதலாம் திகதி திங்கட்கிழமையே வன்னிப் பகுதிக்கான உணவு வாகன அணி கடைசியாக வவுனியாவிலிருந்து வன்னிக்குச் சென்றது.

அதற்கும் மேலதிகமாக இப்போது வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களிலும் மக்கள் இடம்பெயர்ந்து விட்டனர். இவர்களுக்குரிய நிவாரணமும் உரியவாறு அரசால் வழங்கப்படவில்லை.

சிவில் அதிகாரிகள் நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்த போதிலும், வேண்டாத தலையீடுகளால் அது தடைப்பட்டது. இது குறித்து, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தூதுக்குழு கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதியை நேரில் சந்தித்த போது நேரில் ஆட்சேபம் தெரிவித்தது.

மன்னார், பேசாலை, செட்டிகுளம் ஆகிய அரச மருத்துவமனைகளிலும் போதியளவு மருந்துப் பொருள்களும் இல்லை; டாக்டர்களும் இல்லை.

உணவு, மருந்து ஆகிய இரண்டில் எது ஒன்று இல்லையெனினும் மக்கள் சாவை எதிர்நோக்குவர். ஆகையால் போர் முடியுமென்றோ, முடிந்த பின்னர் பாதை திறக்கலாம் என்றோ எதிர்பார்த்துக் கொண்டிருக்காமல், செஞ்சிலுவை சர்வதேசக்குழு மூலம் உணவையும் மருந்தையும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும், இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிக்கும் அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டும்.

தரை வழி மூலம் போக்குவரத்துச் சாத்தியமில்லையெனில், கடல் வழி மூலம் எடுத்துவர வகை செய்ய வேண்டும். அரசு இதனைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லையெனில் அது, தமிழர்களைச் சாகடிக்கச் செயற்படுகிறது என்றே அர்த்தமாகி விடும்!

# கட்டுப்பாடுகள், தடைகள் காரணமாக தொண்டு நிறுவனப்பணிகள் பாதிப்பு

யாழ்ப்பாணத்தில் கடந்த மூன்றரை வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பிரசாரப் படுத்தப்பட்டு வரும் புனர்வாழ்வுத் திட்டங்களினால் யாழ்ப்பாணம் பாழ்ப்பாணம் ஆகிவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஒன்பதாவது ஆண்டு நிறைவு விழாவில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

கடந்த 15 ஆம் திகதி இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை மண்டபத்தில் இணையத்தின் தலைவர் பொ. விக்கினேஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

தென்னிந்தியத் திருச்சபை, மனித முன்னேற்ற நடு நிலையம், மெதடிஸ்த திருச்சபை, அறவழிப் போராட்டக்குழு ஊற்று நிறுவனம், மக்கள் நலன் காக்கும் பிரிவு, அகதிகள் புனர்வாழ்வு நிதியம் -83, சர்வோதயம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சமூக அபிவிருத்திநிறுவனம், அகதிகள்புனர்வாழ்வு நிறுவனம், கிறிஸ்தவ இளைஞர் சங்கம் ஆகிய 12 உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களை, அங்கத்துவமாகக் கொண்ட இணையத்தின் கடந்த கால செயற்பாடுகள் பற்றியும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் இந்த விழாவில் ஆராயப்பட்டதுடன். யாழ்ப்பாணத்தில் நடைமுறைப் படுத்தப்படும் புனர்வாழ்வு புனரமைப்பு, மீள்குடியமர்வு செயற்பாடுகள் பற்றியும் விமர்சிக்கப்பட்டது.

உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு ஆட்சியாளர்களினால் தடை விதிக்கப்பட்டுள்ளதால் மக்களுக்குத் தேவையான பணிகளை முன்னெடுக்க முடியாதுள்ளதுடன் இந்த நிறுவனங்களைத் தொடர்ந்து இயங்க வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது

உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் இயங்க வேண்டியதன் தேவைபற்றி படைத்தரப்பினர் உணர்ந்துள்ள போதும் அரசு இதனைத் தட்டிக் கழித்து வருகிறது என்று இந்தக்கூட்டத்தில் உரையாற்றிய ஒருவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு நிறுவனங்கள் உள்ளூர் நிறுவனங்களுடன் இணைந்து திட்டங்களை மேற்கொள்வதன் மூலம்தான் அவை மக்களைச் சென்றடையும் என்றும் யாழ்ப்பாண மக்களின் புனர்வாழ்வுப் பணிகளுக்கென பல நாடுகளில் உள்ள நன்கொடை நிறுவனங்களிடம் இருந்து பெறப்படும் நிதியில் குறைந்தளவு தொகையே யாழ்ப்பாணத்தில் பயன்படுத்தப்படுகிறது. கூடிய நிதி குறிப்பிட்ட நிறுவனங்களின் அலுவலகங்கள் மற்றும் பணியாளர்களின் போக்குவரத்துக்கள், நலன்களுக்கு எனச் செலவு செய்யப்படுகிறது என்றும்—

உள்ளூர் நிறுவனமும் வெளிநாட்டு நிறுவனமும் குறிப்பிட்ட ஒரு திட்டத்தைச் செயற்படுத்துவதாக இருந்தால் வெளிநாட்டு நிறுவனத்தின் செலவு அதிகமாக இருக்கும் என்றும்—

## இணைய விழாவில் கவலை தெரிவிப்பு

அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் புனர்வாழ்வுப்பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் இங்கு இருக்கக்கூடிய தடைகள் யாவும் நீக்கப்பட்டால் மக்கள் தாமே புனர்வாழ்வு பெற்றுவிடுவார்கள் என்று அங்குஉரையாற்றியஅரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதி ஒருவர் கூறினார்

அவர் மேலும் கூறியதாவது:-

### செய்தி மடல்

'றான்' RRAN என்றுஅழைக்கப்படும் வடபகுதி மீள்குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை யாழ்ப்பாண மக்கள் படும் கஷ்டங்களைப் பற்றிக் கவனத்தில் எடுக்காமல் யாழ்ப்பாணத்தில் தாம் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதாகப் பிரசுரங்கள் மற்றும் தொடர்புச் சாதனங்கள் ஊடாக வெளிநாடுகளுக்குப் பிரசாரம் செய்கின்றது.

1996 ஆம் ஆண்டு மே மாதம் யாழ். புனர்வாழ்வு, புனரமைப்பு மீள்குடியமர்வு பற்றி அறிக்கையொன்றினை வெளியிட்ட 'றான்' 1997 ஆம்ஆண்டு ஊர்காவற்றுறை, தெல்லிப்பழைப் பகுதிகளில் 10 ஆயிரம் குடும்பங்களை மீளக் குடியமர்வது பற்றி அறிக்கை வெளியிட்டது.

பின்னர் 'யாழ்ப்பாணப் பிளான்' என்னும் நூல் ஒன்றினை 60 லட்சம் ரூபா செலவுசெய்து வெளியிட்டது.

இவ்வாறான அறிக்கைகள், வெளியீடுகள் மூலம் வெளிநாடுகளில் இருந்து நிதி திரட்டப்பட்டு யாழ்ப்பாணத்தில் கிள்ளித் தெளிக்கும் நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்பொழுது வெளிநாட்டு நன்கொடையில்யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் என்று தலைப்பிட்டு அதில் அதன் திட்டங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண அபிவிருத்திக்கு 300 கோடி ரூபா செலவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் செலவில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் பற்றி மீளாய்வு எதுவும் செய்யப்படவில்லை.

மீளாய்வு செய்து திட்டங்களின் வெற்றி தோல்வியைக் கண்டறிந்தால் தான் தவறுகளைக் கண்டுபிடித்துச் சரியான வகையில் செயற்பட முடியும்.

குடாநாட்டில் கடந்தகால அனர்த்தங்களினால் இறந்தவர்கள். காயமடைந்தவர்கள், சொத்துக்களை இழந்தவர்கள், வீடுகளை இழந்தவர்கள் என எல்லோருமே பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை ஈடுசெய்யும் வகையில் இதுவரையும் எந்த விதமான திட்டங்களோ அன்றி புனர்வாழ்வுப் பணிகளோ முன்னெடுக்கப்படவில்லை.

பல லட்சம் ரூபா செலவு செய்து கட்டிய வீடுகள் முற்றாக அழிந்துள்ளன. இதற்கு 25 ஆயிரம் ரூபா நட்டஈடு வழங்கினால் மட்டும் போதுமா?

இன்று எந்த ஒரு தொழிலைச் செய்தாலும் வருமானம் பெறமுடியாதுள்ளது. பாதுகாப்பு என்ற போர்வையில் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் முடக்கி வைக்கப்பட்டுள்ளது.

கட்டுப்பாடுகள் தடைகளை அகற்றினால் மக்கள் தங்கள் வளங்களைக் கொண்டு முன்னேறி விடுவார்கள்.

யாழ்ப்பாணத்திலுள்ள அரச செயலகத்துக்கு 3 கோடி 60 லட்சம் ரூபாவுக்கு ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தினால் வாகனங்கள், கணனிகள் போன்றவை வழங்கப்பட்டுள்ளன. இதனால் அரசாங்கம் செய்ய வேண்டிய செலவு குறைவடைந்துள்ளதுடன் யாழ். செயலகத்துக்கு குறிப்பிட்ட தேவைக்கென ஒதுக்கவேண்டிய நிதியைப் பாதுகாப்புச் செலவுக்குத் திருப்பி விடுவார்கள்.

வெளிநாட்டு நிறுவனங்களைப் பொறுத்தவரையில் அரச நிறுவனங்களின் புனரமைப்பு வேலைகளில் காட்டும் சிரத்தையை மக்களின் புனர்வாழ்வுப் பணிகளில் காட்டுவதில்லை. — இப்படி அவர் கூறினார்.

யாழ். மாவட்டத்தில் 698 குளங்கள் இருக்கின்றன. இவற்றில் 104 குளங்கள்தான் இதுவரை திருத்தம் செய்யப்பட்டுள்ளன. இதற்கு 34 லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் வெளிநாட்டுநிறுவனத்தினால்வழங்கப்பட்டுள்ளது.

### கேசரி

1998 ஆம் ஆண்டு திருத்தம்செய்யப்பட்ட குளங்களை மீண்டும் திருத்தம் செய்ய வேண்டிய நிலையில்தான் இந்தக்குளம் திருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன — என்று அங்கு உரையாற்றிய மற்றொரு பிரதிநிதி சுட்டிக்காட்டினார்.

ஆண்டு விழாவைத் தொடர்ந்து அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் தலைவர் பொ. விக்கினேஸ்வரன் தலைமையில நடைபெற்றது.

★

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள இளைஞர்களுக்கானசுய தொழில் வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 2000ஆம் ஆண்டுக்கான தொழில் முயற்சிப் பயிற்சி நெறிகள் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் நடத்தப்பட உள்ளன.

தமிழ் மற்றும் ஆங்கில சுருக்கெழுத்து, தட்டெழுத்து, வானொலிமற்றும் தொலைக்காட்சிப் பெட்டி, தையல் இயந்திரம், தட்டச்சு இயந்திரம், நீர் இறைக்கும் இயந்திரம் என்பன திருத்தல் புத்தகம் கட்டல், வயரிங் வேலைகள், நவீன முறையில் உடையமைத்தல் போன்ற பல பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (க-152)

## நுளம்புப் பெருக்கம்

தனங்களப்பு, மறவன் புலோ பகுதியில் அண்மையில் பெய்த மழையினால் நீர் தேங்கி நிற்பதை அடுத்து இப்பகுதியில் நுளம்பின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (க-102)

## ஸாயி சிந்தனை

உங்கள் இதயத்தில் நீங்கள் அன்பை அறுவடை செய்யாமல் இருந்தால், உங்களால் உண்மையான கிறிஸ்துவனாகவோ, உண்மையான சீக்கியனாகவோ, உண்மையான ஹிந்துவாகவோ அல்லது உண்மையான முஸ்லிமாகவோ இருக்கமுடியாது. அப்போது மனித உருவில் வந்த அரக்கனாகத்தான் உங்களைக் கருத முடியும் உங்கள் இதயத்தில் மட்டும் அன்பை வளர்த்துக்கொண்டு விட்டீர்களானால் நிச்சயம் நீங்கள் தெய்வமே!

உங்கள் உணர்வுகளைப் பொறுத்தே நீங்கள் இறைவனாகவோ, அரக்கனாகவோ மாறுகிறீர்கள். மற்றவர்களிடம் குற்றம்காணாதீர்கள் அம்பாஷாலியின் அழைப்பை ஏற்றதால் புத்தர் விமர்சிக்கப்பட்டார். அவளது தீய ஒழுக்கத்திற்கு அவள் மட்டுமே காரணமல்ல. அவளைத் தூண்டி ஊக்குவித்தவர்கள் பலர்.

(ஆதாரம்:- சனாதனசாரதி)

## நாளை

கார்த்திகை 10

வெள்ளிக்கிழமை

திதி: திருதியை காலை 6.45 வரை; சதுர்த்தி பின் இரவு 4.34 வரை.

நட்சத்திரம்: திருவாதிரை பிற்பகல் 2.49 வரை.

சங்கடஹரசதுர்த்திவிரதம்

சுபநேரம்: 6.12 — 7.42

ராகுகாலம்: 10.42—12.12

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

சிறந்த சொல்வன்மையினால் திருடன் உள்ளத்தையும் திருப்பிவிடலாம். மனோவியாதியையும் உடல் நோயையும் கூட மாற்றி விடலாம்.

— எமர்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டோரின் விவரம்

யாழ்ப்பாணம், நவ. 25

யாழ். குடாநாட்டில் இருந்து வெளிஇடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப் பட்டவர்களின் (இம்மாதம் 23 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

(123410ஏ), (123411ஏ), (123411பி), [123586ஏ], (124979ஏ), (124979பி), (124979சி), (125357ஏ), (125357பி), [125357சி]. (127312ஏ), (127338ஏ), (127338பி)

**நெடுந்தீவு**

(12463ஏ), (12463பி). (12472ஏ), (12472பி], (12488ஏ).

**யாழ்ப்பாணம்**

(113782ஏ), (124517ஏ), (124517பி), (124668ஏ), (124668பி), (124755ஏ), (124811ஏ). (124885ஏ), (124898ஏ), (124941ஏ), (126568ஏ). (126568பி), (126574ஏ), (126574பி), (126576ஏ), (126589ஏ), (126608ஏ), (126615ஏ), (126616ஏ), (126616பி), (126617ஏ), 126617பி), (126625ஏ), [126625பி), (126632ஏ), (126648ஏ), (126648பி), (116670ஏ), (126670பி), (126672ஏ], (126678ஏ), (126678பி), (126678சி), (126685ஏ), (126690ஏ), (126690பி), (126690சி), (126700ஏ], (126723ஏ], (126731ஏ), (126736ஏ), (126759ஏ), (126759பி], (126760ஏ], (126760பி), (126789ஏ), (126836ஏ], (126864ஏ),

**கரவெட்டி**

(132530ஏ), (132530பி), (132530சி), (132603ஏ), (132603பி), (132603சி)

**ஊர்காவற்துறை**

(12173 ஏ), (12403 ஏ), (12449 ஏ), (12449 பி), (12450 ஏ), (12450 பி), (12450 சி), (12451 ஏ), (12451 பி), (12462 ஏ), (12462 பி), (12462 சி), (12462 டி), (12462 ஈ), (12469 ஏ). (12470 ஏ), (12471 ஏ), (12486 ஏ), (12486 பி), (12490 ஏ), (12491 ஏ), (12491 பி),

**கோப்பாய்**

(116795 ஏ), (116795பி), (121095 ஏ)' (121183 ஏ), (122958 ஏ). (122958 பி), (124002 ஏ), (124002 பி). (124062 ஏ), (124117 ஏ), (124117 பி), (124146ஏ], (124148ஏ), (124148பி), (124153ஏ), (124160ஏ), (124160பி), (124164ஏ), (124164பி), (124164சி). (124170ஏ), (133105ஏ), (133105பி)

**நல்லூர்**

(122986ஏ], [124243ஏ), (124245ஏ], (124247ஏ), (124259ஏ), [124270ஏ), (124328ஏ], (124335ஏ), (124415ஏ), (124418ஏ), (124420ஏ), (124428ஏ), (124431ஏ), (124431பி], (124450ஏ), (124451ஏ), (124456ஏ). (122816ஏ), (122816பி), (124867ஏ), (124867பி), (126761ஏ), (126863ஏ), (126863பி), (126863சி), (126863டி), (121659ஏ), (121659பி), (125148ஏ).

**பருத்தித்துறை**

(124372ஏ).

**சண்டிலிப்பாய்**

(123465ஏ), (123465பி), (125002ஏ), (125002பி), (125003ஏ), (125003பி], (125003சி), 125066ஏ), (125083ஏ), (125083பி), (125084ஏ), (125084பி), (125163ஏ], (125163பி), (125259ஏ), (125259பி), (125259சி), (125259டி), (125276ஏ), (125316ஏ), (125422ஏ), (127316ஏ), (127444ஏ), (127493ஏ); (127493பி),

**தெல்லிப்பழை**

123880ஏ), (125208ஏ), (125208பி),

**உடுவில்**

125082ஏ), (125082பி), (125182ஏ). (125182பி). (125272ஏ), (125411ஏ), (25108ஏ).

**வேலணை**

(11950ஏ]. (11950பி), (12440ஏ), (12452ஏ), (12459ஏ), (12459பி), (12459சி), (12479ஏ), (12489ஏ), (12489பி)· (12498ஏ), (12498பி),


## நத்தார் புதுவருட வாழ்த்து மடல்கள் விற்பனைக்கு வந்துள்ளன

விதம் விதமான டிசைன்களில்

- நத்தார் புதுவருட வாழ்த்து மடல்கள்
- பொக்கற் கலண்டர் வகைகள்
- அப்பியாசக் கொப்பிகள் ● காகிதாதிகள்

விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

**மக்மிலன் புத்தகசாலை**

3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T. P. -- 2422

[சி/9965]


## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கப் பணியாளர்
திருமதி ஜெ. சரோஜினிதேவி
அவர்களின் அன்புத் தந்தை

**க. சிற்றம்பலம்**

அவர்களின் மறைவையொட்டி துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து எமது கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

தலைவர். பணிப்பாளர்கள்,
பொது முகாமையாளர், பணியாளர்கள்.
வடமராட்சி கிழக்கு, ப. நோ. கூ. ச:

உபயகதிர்காமம்,
புலோலி.

(71230)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஈராண்டுப் பகுதிநேரப்

**பட்டப்பின் கல்வித்தகைமைக் கற்கை நெறி**

1999 / 2001 இற்கான

## அனுமதி

மேற்படி கற்கைநெறிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளவர்களுக்குப் பிரத்தியேகமாகக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் பெயர்ப் பட்டியலை அலுவலக நேரத்தில் உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி அலுவலகத்தில் பார்வையிடலாம்.

தெரிவு செய்யப்பட்டவர்கள் 1999-11-28 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 1999 - 11 - 28 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணிக்குப் பல்கலைக்கழகப் பொருளியல் துறை மண்டபத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்
1999-11-24

[சி/9960]



## தென்னம் நாற்றுக்கள்

வலி. தென்மேற்கு, நவ. 25

மூன்று வருடத்தில் காய்க்கக் கூடிய தென்னை நாற்றுக்கள் உடுவில் கமநல கேந்திர நிலையத்தின் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

கமநல கேந்திர நிலையத்தின் ஊடாக பதிவு செய்த விவசாயிகள் சமேளனத்தின் உறுப்பினர்களுக்கே 10 நாற்றுக்கள் வீதம் வழங்கப்பட்டு வருகின்றன. (இ-185)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 27 — 05 — 1932

உதிர்வு 26 — 10 — 1999

### திருமதி கதிரவேலு இராசமணி

26—10—99 இல் சிவபதம் அடைந்த எமது பாசமிகு அன்புத் தாயாரின் மரணச் செய்தி கேட்டவுடன் எமது இல்லத்துக்கு வருகை தந்து அனுதாபம் கூறியோருக்கும், தொலைபேசி மூலமும் கடித மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி செய்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நாம் இருகரம் கூப்பி எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (25—11—99) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

நன்றி

கணவன், பிள்ளைகள், மருமக்கள்.

" அன்னை இல்லம் "
கனகசபை வீதி, மானிப்பாய். (71241)

## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, நீர்வேலி 2000 ஆம் ஆண்டுக்கான மீன் கேள்வி அறிவித்தல்

01. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: 1999-11-29 நண்பகல் 12.00 மணி வரை.
02. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 1999 - 11 - 30 நண்பகல் 12.00 மணி வரை.
03. கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி: 1999 — 11. 30 பிற்பகல் 2.00 மணி.
04. கேள்விப் பத்திரங்களை அந்தந்த உப அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
05. மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| குத்தகை விவரம் | கேள்வி பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஆகக்குறைந்த தொகை |
|---|---|---|---|
| **அச்சுவேலி உப அலுவலகம்** | | | |
| 1. அச்சுவேலி ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 1000.00 | 12,000.00 |
| 2. வளலாய், தம்பாலை பொதுச்சந்தை | 50.00 | 100.00 | 400.00 |
| 3. அச்சுவேலி பொதுச்சந்தை (துவிச்சக்கரவண்டிதரிப்பிடம்உட்பட) | 500.00 | 5,000.00 | 6,62,000.00 |
| **புத்தூர் உப அலுவலகம்** | | | |
| 1. புத்தூர்ச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 2,000.00 | 44,500.00 |
| 2. வாதரவத்தை " | 100.00 | 250.00 | 600.00 |
| 3. புத்தூர் மத்திய சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 100.00 | 150 00 | 8,000.00 |
| 4. ஆவரங்கால மரக்கறிச் சந்தை | 50.00 | 100.00 | 1,200.00 |
| 5. புத்தூர் பொதுச்சந்தை | 100.00 | 250.00 | 4,500.00 |
| 6. ஆவரங்கால் மீன்சந்தை | 25.00 | 50.00 | 350.00 |
| **நீர்வேலி உப அலுவலகம்** | | | |
| 1. நீர்வேலி வடக்கு மீன்சந்தை | 100.00 | 150.00 | 3,500.00 |
| 2. " ஆட்டிறைச்சிக் கடை | 50.00 | 150.00 | 1,200.00 |
| 3. " மாட்டிறைச்சிக் கடை | 250.00 | 1000.00 | 11,500.00 |
| **கோப்பாய் உப அலுவலகம்** | | | |
| 1. கோப்பாய் வடக்கு சந்தை | 50.00 | 150.00 | 2,500.00 |
| 2. கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக் கடை | 250.00 | 1,500.00 | 30,500.00 |
| 3. இருபாலைச் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 300.00 | 2,500.00 | 66,500.00 |
| 4. இருபாலைச் சந்தை மீன்சந்தை | 50.00 | 150.00 | 1,500.00 |
| 5. இருபாலைச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 100.00 | 150.00 | 2,250.00 |
| 6. கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 100.00 | 150.00 | 2,250.00 |
| **உரும்பிராய் உப அலுவலகம்** | | | |
| 1. ஊரெழு ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 4,000.00 |

பூ. குணசிங்கம்
ஜே. பி. யு. எம்
தவிசாளர்

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி,
23-11-1999.

(சி/9964)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரிழந்த 10 பேரின் விவரம் விடுதலைப்புலிகள் அறிவிப்பு

வவுனியா, நவ. 25

'ஓயாத அலைகள் — 3 நடவடிக்கையின் போது தமது தரப்பில் உயிரிழந்த 10பேரின் விவரங்களை விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்ற மோதலில் செந்தமிழ் (ஞானப்பிரகாசம் கபிலன் —ஒலுமடு), திருத்தணி (மாடசாமி மணிவண்ணன்), ரகு (குருசாமி ரவிச்சந்திரன் — அக்கராயன்), கப்டன் வேலன் (மாணிக்கம் சுதர்சன் — யாழ்ப்பாணம்), 2 ஆம் லெப்டினன்ட் நகுலன் (மார்க்கண்டு பாஸ்கரன் — யாழ்ப்பாணம்) ஆகியோரும் —

கடந்த 22 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்ற மோதலில் மாறன் (பழனி வசந்தகுமார் — மன்னார்), அரியநாயகம் (அன்ரன் ஜெயசீலன் — மன்னார்), சஜீந்திரன் (செபமாலை போன்ஸ் மத்தியூ — மன்னார்), மணிமாறன் (மாமாங்கம் ஜெகநாதன்—மன்னார்), கிளியரசு (கனகலிங்கம் கனகராஜ் — யாழ்ப்பாணம்), பகீரதன் (கந்தையா தனபாலசிங்கம்— வவுனியா), நிதர்சன் (கோவிந்தன் கேதீஸ்வரன் — முல்லைத்தீவு), அரசலா (இராசையா துஷ்யந்தி — யாழ்ப்பாணம்), கோமளா (சதாசிவம் வதனி — யாழ்ப்பாணம்), பரிதி (பெருமாள் இந்துமதி — கிளிநொச்சி), ஆகியோரும் உயிரிழந்ததாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (ஐ-7)

# கைதான மலையக இளைஞர்களை தாமதமின்றி விடுவிக்கப் பணிப்பு

## பாதுகாப்பு அமைச்சுக்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, நவ. 25

மலையகத்தில் படையினரால் கைதுசெய்யப்பட்டு நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர் யுவதிகள் குற்றமற்றவர்களாக இருந்தால் அவர்களை உடனடியாக விடுதலைசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

மலையகப் பகுதி இளைஞர்கள் காரணம் எதுவுமின்றிக் கைதுசெய்யப்படுவது குறித்த தோட்ட, வீடமைப்பு பிரதி அமைச்சர் பி சந்திரசேகரன் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதை அடுத்தே இந்தப் பணிப்புரையை ஜனாதிபதி விடுத்துள்ளார்.

அற்ப காரணங்களுக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர், யுவதிகள் தொடர்பான விசாரணைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் —

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களை வருடக் கணக்கில் தடுத்து வைப்பது நிறுத்தப்பட வேண்டும் எனவும் — ஜனாதிபதி பணித்துள்ளார் என்று இலங்கை வானொலி தெரிவித்தது (ஐ-7)

# கொடிகாமம் பகுதியில் பன்றிகள் அட்டகாசம்

கொடிகாமம் மந்துவில் பகுதியில் பெரும் எண்ணிக்கையான காட்டுப் பன்றிகள் குடியிருப்புப் பகுதிகளில் பெரும் அட்டகாசம் புரிந்து வருகின்றன

வளவுகளில் உள்ள பயிர் வகைகள், பாத்திகளைச் சேதப்படுத்துவதுடன் வீடுகளுக்குள் புகுந்து தானிய வகைகளையும் அழித்து வருகின்றன.

வளவுகளுக்குள் வரும் பன்றிக்கூட்டத்தைத் துரத்துவோரைப் பன்றிகள் தாக்கிக் காயப்படுத்துகின்றன

பன்றிகளின் தாக்குதலுக்கு இலக்கான இருவர் நேற்று முன்தினம் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெவ்வேறு இடங்களில் பன்றிகளின் தாக்குதலுக்குள்ளான வேறு இருவருமே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பன்றிக் கூட்டத்தைக் கண்டதும், வீட்டுக்குள் ஓடி மறைந்து கொள்ளும் நிலை மந்துவில் பகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

பன்றிகளைத் துரத்திய நாய்கள் பல தாக்குதலுக்கு இலக்காகி மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# தமக்குத்தாமே பட்டங்களைச் சூடும் நிலை இன்று வளர்ந்து வருகின்றது

## பாராட்டு விழாவில் ஆதீன முதல்வர்

நெல்லியடி, நவ. 25

"பாராட்டை, புகழை எதிர்பாராத ஆறு திருமுருகன், லண்டனில் போர்த்திய பொன்னாடையை அங்கேயே விட்டு விட்டு வந்துவிளார். இங்குள்ள சிலர் பட்டங்களைப்பெறாமலேயே தமக்குத்தாமேபட்டங்களை சூடிக் கொள்வதைக் காண்கின்றோம்.

ஆறு. திருமுருகனின் பாராட்டு விழாவில் ஆசியுரை வழங்கிய நல்லை ஆதீன முதல்வர்ஸ்ரீலஸ்ரீசோம சுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைபண்பாட்டுப் பேரவையில் இடம்பெற்ற இந்த விழாவின் ஆரம்பத்தில் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனும் அவரது பெற்றோரும் தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசை வழிபாட்டில் கலந்துகொண்டனர். பின்னர் அங்கிருந்து மங்கள வாத்திய இசையுடன் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

நல்லை ஆதீன முதல்வர் மேலும் தெரிவித்ததாவது:-

மண்ணின் பெருமையை உலகம் அறியச் செய்யும் ஒருவருக்கு சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டுப் பேரவையினர் இன்று விழா எடுக்கின்றார்கள்.

சிலர் மேடையில் பேசும் மட்டும் சைவம் பின்னர் வீட்டுக்குப் போனால் அசைவமாகக் காணப்படுவார்கள். சமயப் பேச்சாளன் கூட அந்த நேரத்துக்கு ஆடிப் போட்டுப் பின்பு களைகின்றான். இவை அனைத்துக்கும் எதிர்மாறாக இருப்பவரே ஆறு. திருமுருகன்.

கொழும்புக்குச் செல்பவர்கள் நெற்றியிலுள்ள விபூதியை வழியில் அழிக்கும் இந்தக்கால கட்டத்தில் தமிழனுக்குரிய பாரம்பரிய உடையுடன் லண்டனுக்குச் சென்றுபணி செய்து திரும்பியவர் ஆறு. திருமுருகன். உலகளாவியரீதியில சமய உண்மைகளை உலகுக்கு எடுத்துக் காட்டுவது அவரது உள்ளத்தின் அழகுதான்.

இணுவிலில், கலைஞர்கள் வாழ்ந்த இடம் தவில் மேதை காலஞ்சென்ற தட்சணாமூர்த்திபோன்றபல பெரியார்கள் வாழ்ந்த இடத்தைச் சேர்ந்தஆறு. திருமுருகனுக்கு வடமராட்சி மக்கள் எடுக்கும் இப்பாராட்டு விழாமூலம்முருகப்பெருமானின் அருள் எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

ஆறு. திருமுருகன் தனது பதிலுரையில் கூறியதாவது:

'லண்டன் மாநகரில் வெள்ளைக்காரர்கள் சைவக்குரவர்களாக மாறி சமயப்பணி செய்யும் அதேவேளை இலங்கையில் சமயப் பணி தேய்ந்து செல்கிறது''.

லண்டன் மாநாட்டுக்கு எனக்கு அழைப்பு வந்த போது, நல்லை ஆதீனம், துர்க்கை அம்மன் தேவஸ்தானம் போன்ற இடங்களுக்குச் சென்று வணங்கினேன். அங்கு என்னை வாழ்த்தினார்கள். அதன் பின்னரே சைவப் பணிக்காக லண்டனுக்குப் புறப்பட்டேன்.

வடமராட்சிப் பகுதியில் அப்போது இ. ஜெபராஜ் அவர்கள் எனக்கு வழங்கிய அறிவு, ஆசீர்வாதம் தான் கடல் கடந்து மற்றவர்களுக்கு என்னை அர்ப்பணிக்கும் பணிக்கு வித்திட்டது. இதனைவிட சந்நிதியான் ஆச்சிரம பெரியார்கள் அடிக்கடி என்னைச் சந்தித்து ஆசீர்வாதம் வாழ்த்து என்பவற்றை வழங்கியமையும் என்னை சமய நெறிக்கு உயர்த்தியது. — நான் சேவை செய்துவிட்டேன் என்ற தகுதியைப் பெறவில்லை. சைவப்பணிகள் இன்னும் பல காத்திருக்கின்றன. ஆதீன குருமார்களைத் தேடுவது மிகவும் கடினம். லண்டன் மாநாட்டுக்கு சிவநந்தி அடிகள், இந்திய ஆதீன பிரதிநிதிகள் வந்திருந்தனர். உங்கள் நாட்டில் [இலங்கையில்] தான் இளைஞர் ஒருவர் ஆதீனம் நடத்துகிறார் ஈழத்தில் இளைஞர் ஒருவர் ஆதீனம் நடத்துவது இலங்கைக்கே பெருமை என்றார்கள். உண்மை தான்.

லண்டனைப் பொறுத்தவரை சைவம் பெரிய வளர்ச்சி கண்டுள்ளது. அங்குள்ள வெள்ளைக்காரர்களே சைவக் குரவர்களாக மாறி சமயப் பணிகளைச்செய்கின்றார்கள்.

பிரான்ஸில் தேர் உண்டு; சுவிஸில் தேர் உண்டு, எழுச்சி வளர்ச்சியடையுமோ என்ற ஏக்கம் அங்கு நிலவுகிறது. லண்டனிலும் 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தமிழ் தெரியாது. அவர்கள் கோயிலுக்கு வருவதில்லை. நேரமில்லை என்கிறார்கள். புலம் பெயர்ந்த நமது நாட்டு மக்களும் தமிழ் தெரியாது திண்டாடுகின்றார்கள். தேவாரம் ஆங்கிலத்தில் இசைக்கின்றார்கள். புலம்பெயர்ந்தவர்கள் கூட சமயத்தை மறக்கவில்லை என்பது புலனாகின்றது.

சுவிஸ், லண்டன், பிரான்ஸ் நாட்டில் வயது முதிர்ந்தவர்கள் சமய ஆர்வத்தோடு வாழ்க்கையை நெறிப்படுத்தி வருகின்றார்கள்.

லண்டனிலுள்ள 'வேல்ஸ்' முருகன் கோயிலுக்கு ஆங்கிலேயர் கூட வருகின்றார்கள். மலையிலிருக்கும் இக்கோயிலில் திரைச்சீலை போட்டே பூசை இடம் பெறுகிறது. வெள்ளைக்காரரே சைவக் குரவர்களாக மாறி சமயப் பணி புரிகிறார்கள்.

ஒரு காலத்தில் லண்டனில் வெள்ளைக்காரரின் கோப்பையை தமிழன் கழுவினான். இன்று தமிழனின் கோப்பையை வெள்ளைக்காரர் கழுவிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழர்கள் திக்கற்று நிலை குலைந்து போனவர்கள். இனம், மதம் மறந்து கூட்டுப் பிரார்த்தனை செய்கின்றார்கள். நம்முன்னோர் கும்பிட்டு வளர்த்த தலங்களைக் கூற முடியாது. வேல்ஸ் முருகன் ஆலயத்தில் சாதி, மதம் எல்லாம் மறந்து ஜப்பான் நாட்டு மக்கள் 12 மணிபூசை நேரம் பாடி மிருதங்கம் அடிக்கிறார்கள் பிறமொழி பேசுகிறார்கள். எமது சமய நூல்களை மறக்கவில்லை கவுன்சில்கள் வாடகைக்கு விற்கும் போது வாங்குகிறார்கள்.

லண்டனில் பிள்ளையார், முருகன், துர்க்கை அம்மன் என பதினொரு இந்துக் கோயில்கள் உண்டு. கிறிஸ்தவ ஆலயங்கள் இருந்தகட்டடங்களோ இந்துஆலயங்களாக அமைக்கப்பட்டு வழிபாடு நடைபெறுகின்றன — என்றார்.

இந்தப்பாராட்டு விழாவில் பேரவையின் தலைவர் எஸ். திருப்பரங்கிரிநாதன் பேரவை போஷகர்சிவஸ்ரீ கை நமசிவாயக் குருக்கள், பருத்தித்துறை சாரதாசேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா, ஓய்வுபெற்ற பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் சி. முருகேசம்பிள்ளை, பருத்தித்துறை பிரதேச செயலக உதவித் திட்டமிடற்பணிப்பாளர் என். மகேந்திரன், பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்க போஷகர் சட்டத்தரணி இ. உருத்திரா, ஆசிரியர் ஆ. சிவநாதன் உட்பட இன்னும் பலர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

வடமராட்சி மக்கள் சார்பில் இளைப்பாறிய தபாலதிபர் சி. சிவக்கொழுந்து, 'கலாபூஷணம்' சீவரத்தினம் ஆச்சாரி வடமராட்சி கம்பன் கழக சார்பில் மன்னவன் கந்தப்பு, க தயாபரன், சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் சார்பில் சிவஸ்ரீ க விசுவநாதக் குருக்கள் உட்பட பலர் வாழ்த்துப்பா பாடி பொன்னாடையும்போர்த்திக்கௌரவித்தனர்.

கலைநிகழ்வுகளில் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம், கரவெட்டி ஞானாசாரியார் கல்[illegible] நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. [ஐ-109]

# சுகாதாரம் பற்றிய சுவரொட்டி

யாழ்ப்பாணம், நவ. 25

யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் சுகாதாரம் பற்றிய பல்வேறு சுவரொட்டிகள் வெளியிடப்படவுள்ளன.

அதன் முதற்கட்டமாக "அளவோடு பெற்று வளமோடு வாழ்வீர்" எனும் கருத்தை உணர்த்துகின்ற வர்ணப் படங்களுடன் கூடிய சுவரொட்டி அண்மையில் வெளியாகியுள்ளது.

மேற்படி சுவரொட்டியைப் பெற்றுக்கொள்ள விரும்பும் ஆர்வமுள்ள நிறுவனங்கள் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இவ்வாறான சுவரொட்டிகள் யாவும் கொழும்பிலிருந்தே இங்கு எடுத்து வரப்பட்டதாகவும் இதுவே இங்கு தயாரிக்கப்பட்ட முதற் சுவரொட்டி எனவும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [இ-10]

# கூ. சங்கத்தால் சகலரும் பயன் அடைய வேண்டும்

## கட்டடத் திறப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம். நவ 25

கூட்டுறவுத் துறையின் மூலம் சாதாரண மக்களும் பயனடையவேண்டும். சகல மக்களின் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இதற்காக அனைவரும் இணைந்து கூட்டுறவுத் துறையை வளர்க்க வேண்டும்.

யாழ். மாவட்ட சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்திற்கான புதிய கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றியயாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்படி புதிய கட்டடத் திறப்புவிழா சமாஜத்தின் தலைவர் ச. முருகநேசன் தலைமையில் நடைபெற்றது.

இந்த விழாவில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபைத் தலைவர் பெ. கனகசபாபதி, தெல்லிப்பழை ப.நோ.கூ சங்கத் தலைவர் எஸ் சிவமகராசா, யாழ்ப்பாணம் ப. நோ. கூ சங்கத் தலைவர் சீ. வி கே சிவஞானம், கூட்டுறவு சமாஜத்தின் மாவட்ட செயலாளர் எஸ். நகுலேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். [இ-10]

# கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்படும்

வலி. கிழக்கு, நவ. 25

உரும்பிராய் உபபிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் எதிர்வரும் 29 ஆம் திகதி கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதால் அன்றைபதினம் பொதுமக்கள் தமது வளர்ப்பு நாய்களைக் கட்டி வைக்குமாறு பிரதேசசபை கேட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் கட்டாக்காலியாக திரியும் அனைத்து நாய்களும் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது [க-180]

# வயோதிப மாது பலி

வலி. வடக்கு. நவ 25

தனிமையில் வாழ்ந்த புத்தி சுவாதீனமற்ற வயோதிப மாது ஒருவர் கிணற்றில் வீழ்ந்து மரணம் அடைந்தார்.

வடலிஅடைப்பு அரசடிச்சந்தியைச் சேர்ந்த சரவணமுத்து கற்பகம் (80 வயது) என்ற மூதாட்டியே மரணமடைந்தவர் ஆவார்.

இவரின் மரண விசாரணையை மல்லாகம் மாவட்ட நீதிமன்ற பதில் நீதிபதி மு ச பாநாதன் நடத்தினார். தவறி வீழ்ந்து மரணம் அடைந்ததாகதீர்ப்பு வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மடு...

(முதலாம் பக்கத் தொடர்)

மடுத் தேவாலயம் எந்தக் காலத்திலும் போர்க் களமாக இருக்கவில்லை. அரசாங்கம் மாகாணசபைத் தேர்தல் வெற்றிக்காக மடுவைக் கைப் பற்றியது.

அதன் பின்னர் புலிகள் மடுவைக் கைப்பற்றினர். புலிகள் அங்கிருந்து விலகியதும் ஜனாதிபதித் தேர்தலில் வெல்வதற்காக இராணுவத்தை மீண்டும் கைப்பற்ற வைத்தது அரசுத் தரப்பு.

மீண்டும் மடுவைக் கைப் பற்றி அரசியல் லாபம் ஈட்ட முனைந்தமையே இந்தத் தாக்குதலுக்குக் காரணமாகி விட்டது. இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-3)

## மெய்வன்மை பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 25

ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய் வல்லுநர் சங்கம் நடத்தும் மெய்வன்மைத்தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவோர் தமக்குரிய அனுமதி அட்டைகளையாழ்ப் பாணம், கஸ்தூரியார் வீதியில் உள்ள 'அருண் ஸ்போர்ட்ஸ் ஸ்பொட்'டில் யாழ் மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர்சங்கத்தின் தலைவர் கப்டன் என். சோமசுந்தரத்திடம் பெற்றுகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)


எமது புதிய
வீடியோ CD
வெளியீடுகள்!

கண்ணுபடப் போகுதய்யா
முதல்வன்
S.A. ராஜ்குமார் இசையில்
திரைப்பட
நட்சத்திரங்களின்
சிங்கப்பூர் இசை நிகழ்ச்சி
அடுத்த CD வெளியீடு!
ஊட்டி

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/9970)



ஷண்ணின் வீடியோ CD
வெளியீடுகள்!

ஊட்டி
ஒறிஜினல் CD பிரதிகளை
இப்போதே பெறலாம்.
★ திரையரங்குகளுக்கு
முன்னுரிமை
கண்ணுபடப் போகுதையா
முதல்வன்
இவை ஒறிஜினல் CD க்கள்
பிரதிகளில் பெயர் இல்லாமல் பெற்றுக்கொள்ளலாம்.
தரமான பிரதிகளை
வழங்குவதில்
ஷண் நம்பர் வண்

ஷண் றெக்கோடிங் ஸ்பொட்
பெரியகடை, யாழ்ப்பாணம்.
கொட்டாஞ்சேனை,
கொழும்பு - 13.
(71248)


## மல்லாவியிலும்...

(முதலாம் பக்கத் தொடர்)

மதகுருமார்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அரச, அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட ஆயிரக்கணக்கானோர் இந்த பேரணியில் கலந்துகொண்டனர்.

அவர்கள் அரசுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பியவாறு சென்றனர் எனச் செய்திகள் தெரிவித்தன. (உ-7)

## மன்னார்.

(முதலாம் பக்கத் தொடர்)

அடைந்துள்ளனர்.

நானாட்டானை அண்டிய பதினொரு கிராமங்களைச் சேர்ந்த சுமார் 3 ஆயிரம் பேர் நானாட்டான் தேவாலயத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

அதேவேளை—

தீவுக்கு வெளியில் அடம்பன், மாந்தை ஆகிய பகுதிகளில்இருந்து இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான பொதுமக்கள் மடுத் தேவாலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

போதிய இடவசதிகள் இன்றி மக்கள் மரங்களுக்குக் கீழ் தங்கியிருப்பதாகக் கூறப்பட்டது. (உ-3)

## மருவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

வும் ஆயர் தெரிவித்தார்.

''அந்த ஆஸ்பத்திரியில் ஒரு சத்திரசிகிச்சைக் கூடம் மட்டுமே உள்ளது.''

''அங்கு பணியாற்ற வேண்டிய 17 வைத்தியர்களில் ஆக ஏழு வைத்தியர்கள் மட்டுமே இப்போது பணியாற்றுகின்றனர்.''

''எக்ஸ்றே உபகரணங்களும் அங்கு இல்லை.''

இந்தக் காரணங்களினால் நோயாளர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க முடியாத நிலையே நிலவுகின்றது— என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நோயாளர்களை தேவையானால் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்புவதற்கு மட்டுமே தமக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதால் அவர்களை வேறு வழியாக ஆஸ்பத்திரிகளுக்கு தன்னால் அனுப்பமுடியாதுள்ளது என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் தம்மிடம் தெரிவித்துள்ளதாகவும் ஆயர் சொன்னார்.

கொழும்பு சென்றுள்ள ஆயர் வவுனியா வைத்தியசாலைக்கு எக்ஸ்றே உபகரணம் ஒன்றைப் பெற்றுக் கொடுக்க நேற்று முயற்சி எடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)


எமது வீடியோ CD
வெளியீடு!
கண்ணுபடப் போகுதையா
பிரதிகளை உடன்
பெற்றுக்கொள்ளலாம்.

ஆர்க் வீடியோ லைபிறறி
அம்மன் வீதி,
(சி/9968)



வீடியோ CD
வெளியீடு
விஜயகாந், சிம்ரான்
*கண்ணுபடப் போகுதய்யா
பிரதிகள் உடன் பெறலாம்
அடுத்த வெளியீடு!
முரளி நடித்த
* ஊட்டி
* தாஜ்மஹால்

விஷ்ணு வீடியோ
K.K.S. Road,
கொண்டாவில்.


## கூடைப் பந்தாட்ட போட்டி

யாழ். ஹற்றன் நஷனல் வங்கி பாடசாலைகள், கழகங்களுக்கு இடையில் தனித் தனியாக நடத்தும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில், இன்று யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடு களத்தில் இடம்பெற உள்ள மூன்றாம் இடத்தைப் பெறும் அணியைத் தெரிவு செய்வதற்கான ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3.15 மணி— யாழ். மத்திய கல்லூரி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி.

★ மாலை 4.30 மணி— பற்றீஷியன் வி. க. அணி எதிர் ஓல்ட் கோல்ட்ஸ் வி. க. 'ஏ' அணி. (உ-8-4)

## சதுரங்கப் போட்டி ஒத்தி வைப்பு

கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நாளையும் நாளை மறுதினமும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடத்தப்படவிருந்த மாவட்ட ரீதியிலான — சதுரங்கச் சுற்றுப் போட்டி பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

பாடசாலைகளில் தற்போது நடைபெற்று வரும் பரீட்சை காரணமாக இப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளதாகவும், புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் யாழ். கல்வி வலயத்தின் உடற் கல்விக்குப்பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## சித்திர, சித்த மருத்துவ மாணவர்களுக்கு

யாழ். பல்கலைக்கழகத்தில் சித்திரமும் வடிவமைப்பும், சித்தமருத்துவம் ஆகிய கற்கைநெறிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கான வகுப்புக்கள் எதிர்வரும் 29 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றன.

## தனித் தமிழீழத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

மாள் சுமார் ஒன்பதரை ஆண்டு கால மௌனத்தின் பின்னர் நேற்று உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்தியாளர்களை முதல் தடவையாகச் சந்தித்தார்.

''அவரது தமிழீழப் பிரகடனம் தன்பாட்டில் சொந்த முடிவில் செயற்பட்டது. அது செயலுருப்பெறாத வெறும் அரசியல் அறிக்கை மட்டுமே'' என்று வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்று நேற்றைய அவரது பேட்டி தொடர்பான தனது செய்தியில் குறிப்பிட்டது.

''தனித் தமிழீழத்துக்கு வாய்ப்பே இல்லை; அது நடைமுறைச் சாத்தியமற்றது'' என்று நேற்றுக் குறிப்பிட்ட பெருமாள், இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக இந்த விடயத்தில் இந்தியாவும் சர்வதேச சமூகமும் தலையீடு செய்ய வேண்டும் என்றும் கூறினார்.

''பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னரே தமிழீழப் பிரிவினையை தமிழ் மக்கள் கைவிட்டு விட்டனர். 1986 இல் 'ரெலோ' இயக்கம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திய போதே நாங்கள் யுத்தத்தில் (War) தோற்றுவிட்டோம். இப்போது நடப்பது வெறும் சண்டை (Battle) தான்.

''இப்போது இலங்கையில் அரசியல் சூழ்நிலைகள் பெரும் மாற்றமடைந்துள்ளன. இன்று பிரிவினை தமிழர் நலனுக்கு உகந்த ஒன்றல்ல என்றாகிவிட்டது.

இந்தப் பிராந்தியத்தில் மட்டுமல்லாது பெரும்பான்மைச் சிங்களவர்களின் போக்கிலும் இப்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது. பெரும்பான்மைச் சிங்களவர்கள் இப்போது அதிகாரப் பரவலாக்கலையே விரும்புகின்றனர்.

''நாட்டிலுள்ள முற்போக்குச் சக்திகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஓரமைப்பை ஏற்படுத்தி 21 ஆம் நூற்றாண்டில் நாட்டை புதிய அரசியல் முறைமையில் வழிநடத்துவதற்கு முன்வரவேண்டும் .

ஐக்கிய இலங்கை என்ற அமைப்புக்குள் அதிகாரப் பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு சம்பந்தப்பட்ட பல தரப்பினர் மத்தியிலும் பரந்த அடிப்படையிலான உடன்பாடு ஒன்று உருவாகவேண்டும். இதற்கான பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகளும் சேர்த்துக்கொள்ளப் படவேண்டும்.

''புலிகளையும் அரசையும் பேச்சுக்கு இணங்க வைப்பதற்கு இந்தியாவில் உள்ள தமிழ்த் தலைவர்களும் ஏனைய நாட்டுத் தலைவர்களும் உதவவேண்டும்.

இராணுவ நடவடிக்கை இனப் பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வாகாது. இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வுகாண முயன்றால் அதனால் வன்முறை, வன்செயல்கள் தான் அதிகரிக்கும்.

புலிகளும் பிரிவினையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களே.

பிரிவினை புலிகளின் நலனை அடிப்படையாகக் கொண்டதே தவிர தமிழர்களின் நலனை நோக்காகக் கொண்டதல்ல. பிரிவினை இல்லாமல் புலிகள் பிழைக்க முடியாது.—என்று பெருமாள் மேலும் குறிப்பிட்டார்.

ஒன்பது ஆண்டு காலம் இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில்தமக்குப்புகலிடம்தந்ததற்காக இந்திய அரசுக்கு அவர் நேற்றைய பேட்டியின்போது நன்றி தெரிவித்துக் கொண்டார். (உ-3-7)

## மன்னிப்புச் சபை,..

(முதலாம் பக்கத் தொடர்)

தெரிவித்துள்ளது.

மடுவில் பொதுமக்கள் தஞ்சம் அடைந்துள்ளார்கள் என்ற செய்தி யுத்தத்தில்ஈடுபட்டிருக்கும் இரண்டு தரப்பினருக்கும் தெரியும்எனவும்—

பொதுமக்களுக்கு உயிரிழப்பு ஏற்படுவதைத் தவிர்க்க இந்த இரண்டு தரப்பினரும் ஏற்கனவே நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் எனவும்—

அது மேலும் தெரிவித்துள்ளது. (உ-7)

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

டில் உள்ள பகுதிகளிலிருந்து பொதுமக்களை விரட்டுவதற்கு விடுதலைப் புலிகள் முயற்சி செய்துள்ளனர். அத்துடன் மக்களிடையே பீதி நிலையையும் ஏற்படுத்தியுள்ளனர் எனவும்—

குறிப்பிட்ட மேஜர் ஜெனரல் நீல்டயஸ், விடுதலைப் புலிகளின் எந்தவொரு தாக்குதலையும் முறியடிக்க படையினர் தயாராகவுள்ளனர் எனவும் தெரிவித்ததாக இலங்கை வானொலி அறிவித்தது. (உ-7)

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்)

பணிப்பாளர்கள், டெயிலி நியூஸ், தினமின ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர்கள் ஆகியோருக்கு இந்த நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது

## யாழ். நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்)

வர் படுகாயமடைந்தார்.

அந்தோனிப்பிள்ளை ஸ்ரனிஸ்லாஸ் (வயது 33) என்ற இந்த இளைஞர் வயிற்றில் காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவரைக் கலைத்து வந்த இருவரில் ஒருவர் பிஸ்டலால் இவர் மீது சுட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-8-4-6)

## ஆறாம் ஆண்டு நெஞ்சகலா நினைவினில்

எங்கள் தலைவா! அப்பா!!



அன்னை மடியினில் 18 — 04 — 1927

ஆண்டவன் அடியினில் 01 — 12 — 1993

### அமரர் சங்கரப்பிள்ளை பீதாம்பரம்

(ஓய்வுபெற்ற உப அதிபர், யா/நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலை)

திதி: 25-11-1999 வியாழக்கிழமை

ஆண்டுகள் ஆறு ஆற்றெடுத்து ஓடினாலும்
ஆறாது அப்பா அவனியிலே தங்கள் பிரிவுத்துயர்
ஆதரித்து அன்புடன் வளர்த்தெடுத்த அப்பாவே!
ஆற்றொணாக்கவலையுடன் ஆறாது நிற்கின்றோம்
அப்பா! தலைவா!

தங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை இரு கரங்கள் கூப்பி இறைஞ்சி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

என்றும் தங்கள் ஒளியின்றி வாடும்

அன்பு மனைவி: திருமதி பீ. சிவயோகம்
பாசமிகு பிள்ளைகள்: செல்வி பீ.மல்லிகாதேவி
செல்வி பீ. பத்மராணி
மைத்துனர்: திரு.க.சந்திரசேகரி குடும்பத்தினர்
சகோதரர்கள், மைத்துனர்கள்.

''சிவபதி''
விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(சி/9962)

இப்பத்திரிகை திரு உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது [illegible] 25.11.1999 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org